


# பாலகுமாரன்

# பச்சை வயல் மனது



# என்றென்றும் அன்புடன்...

மறுபடியும் புத்தக உருவில் வாசகர்களோடு சந்திப்பது சந்தோஷமாயிருக்கிறது. இன்றைய பத்திரிகைகள், வாசகர்களைச் சென்றடைய வசதியான வாகனங்கள் எனினும், அவற்றால் பெரும் பரப்பில் தொடர்பு ஏற்படுவதைத் தெரிந்த பிறகும் இப்படி புத்தகமாக வாசகரைச் சென்றடைய எல்லா எழுத்தாளனுக்கும் விருப்பம் அதிகமிருக்கும்.

பத்திரிகைகள் மூலம் தொடர்பு, கடிதம் வழியே பேசுவது போல என்றால், புத்தகங்கள் என் வீட்டு வாசலில் வாசகரோடு சல்லாபிப்பது போல.

இதே விதமாய் வாசகரும் உணர முடியுமோ என நினைக்கிறேன்.

'பச்சை வயல் மனது' பிரசுரித்த ஆனந்த விகடன் ஆசிரியர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கட்கும் 'பனி விழும் மலர் வனம்' பிரசுரித்த 'மெட்டி' ஆசிரியர் திரு. வலம்புரிஜான் அவர்கட்கும் என் மனமார்ந்த நன்றி. இவையிரண்டையும் உடனடியாய் புத்தகமாய் வெளியிடும் விசா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்துக்கு என் நன்றி.

என்றென்றும் அன்புடன்

101/8A, வி. எம். தெரு,
சென்னை-600 004.

பாலகுமாரன்

# பச்சை வயல் மனது

## 1

சட்டென்று டி.வி. பெட்டியில் எழுத்துக்கள் நகர்ந்து விட, கவியரங்கத்தின் முகப்பு தெரிந்தது. காமிரா தாழ, தலைகள் உயர்ந்தன. இடது கோடி மூலையில் கல்பனா உட்கார்ந்திருந்தாள். பெரிய பூக்கள் போட்ட புடவையில் பின்னுக்குச் சாய்ந்தபடி கையில் உள்ள பேப்பர் கற்றைகளைச் சரி செய்து கொண்டிருந்தாள்.

''ஹை...சித்தி... கல்பனா சித்தி. அம்மா, கல்பனா சித்திய பாரும்மா— எவ்ளோ அழகா இருக்கா...'' ரமேஷ் கூவினான்.

வீட்டின் ஜன்னல் கதவுகளை அடைத்துவிட்டு அரையிருளில் உட்கார்ந்திருந்த சகோதரிகள் பையனின் ரசனைக்கு வாய்விட்டுச் சிரித்தார்கள்.

''அவ அழகுக்கு என்னடா கொறைச்சல்? அப்படியே தாத்தாவை கொண்டிருக்கா சரஸ்வதி'' அக்கா மகனை அணைத்துக் கொண்டாள்.

''நா கொஞ்சம் உசரம் இல்லக்கா...?'' டி.வி. எதிரே உட்கார்ந்து தன்னையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கல்பனா வினவினாள்.

''ம்... நல்ல உசரம்தான். அப்பா மாதிரி.''

''கண்ணாடில பாக்கறச்சேகூட தெரியலை. என்னை நானே டி.வி.ல பாக்கறச்சதான் ரொம்ப உசரமோன்னு படறது. கொஞ்சம் கூன் வேற போட்டுருக்கேன்.''

''வயசாறதே, இருபத்தெட்டு, கூன் போடாத என்ன பண்ணுவே...?''

''ச்சு... கொஞ்சம் சும்மா இரேன். கவிதையைக் கேட்போம்.'' கல்பனாவின் தங்கை சுதா அதட்ட, மௌனமானார்கள்.

கவியரங்கத் தலைவர் முன்மொழிய, முதலில் ஒரு இளம் கவிஞர் கவிதை வாசித்தார். மறுபடி வரவேற்க, இன்னொரு நடுத்தர வயதுக்காரர் முழங்கிவிட்டுப் போனார். அவர் முழக்கத்துக்கு டி.வி. அரங்கத்தினுள் உள்ள பார்வையாளர் கைதட்ட, கல்பனா எழுந்தாள். உட்கார்ந்திருந்த நாலு பேரைத் தாண்டி மைக் அருகே நின்றாள். தலையைக் கோதிக்கொண்டாள். மேசையில் பேப்பரைப் பரப்பி வணக்கம் சொன்னாள். காமிரா நெருங்கி முகம் மட்டும் காட்டியது. வளைந்து கனிந்த கீழுதடும் சாந்துப் பொட்டும் ஜிமிக்கி குலுக்கலையும் முகவாய் வழுக்கலையும் துல்லியமாய்க் காட்டியது.

''ச்சே... நெஜமாகவே நீ அழகுதாண்டி.'' — சுதா பரவசப்பட்டாள். ''ஃபோட்டோஜெனிக் ஃபேஸ்... பேசாம காலேஜ் வேலைய வுட்டுட்டு சினிமா, டிராமால சேர்ந்துடு.''

''போறும். பொயட்ரிய கேள்.''

டி.வி. பெட்டிக்குள் உள்ள கல்பனா லேசாக செருமிக் கொண்டாள். தன் கவிதையை ஆரம்பித்தாள்.

''உள்ளூறும் சிந்தனையில் உற்சாகம் பிறக்கையிலே
மேலூறும் ஓர் எறும்பு கொடுக்கழுத்தி கடிக்கையிலே
அளுயர நாய் பார்த்து அதிசயித்து நிற்கையிலே,



கள்ளூறும் கவிதையினை உள்வாங்கி திகைக்கையிலே,
ஓர் சொல்லே உலகத்து மனிதரிடம் வெளியாகும்.
தன்னையும் அறியாமல், 'அம்மா'வெனக் குரல் எழுப்பும்
அதிசயமோ ஆத்திரமோ ஆயாசப் பெருமூச்சோ.
உணர்ச்சியது எதுவரினும் இவ்வொலியே முன் நிற்கும்.
ஆதார ஓர் அசைவை மானுடத்து முதற் குரலை
தன்னுள்ளே சொல்லாக்கி வடிவமைத்துத் தக்க வைத்த
என் தமிழே—இயல்பானப் பெருமொழியே.
கவியரங்கக் கன்னி நான் கரம்கூப்பி
வணங்குகின்றேன்.''
கூட்டம் கை தட்டிற்று.

''ஜம்முன்னு ஆரம்பிச்சிருக்கேடி. பிரமாதம்.'' சரசு அக்கா, கையை அழுத்தினாள். டி.வி.—யின் உள்ளே கல்பனா பேப்பரை மாற்றினாள். குரலை உயர்த்தினாள்.

''கவியரங்கத் தொட்டிலிலே கை கொட்டும் மழலை நான்
கையசைத்து காலசைத்து கவிபாடும் பிள்ளை நான்
காதோரம் கேட்டவற்றைக் கண் பார்த்த அதிசயத்தை
என் மொழியில் கவியாக்கி உம்முன்னே வைக்கின்றேன்
தமிழ்ப்பாலைத் தினந்தோறும் வயிறுமுட்டக் குடித்துவிட்ட
தைரியத்தில் எழுதுகின்றேன். பிழையிருப்பின்
பொறுத்தருள்வீர்
போஷாக்குக் குறைவென்றால்—அது தாய்ப்பாலின்
குற்றமல்ல;
போதாத காரணம்தான், எனக்கு... புத்தி போதாத
காரணம்தான்.''

கூட்டம் சிரித்தது. ஹாலில் சகோதரிகள் சிரித்தனர். கல்பனாவுக்கும் சிரிப்பு வந்தது.

மறுபடி சற்று இடைவெளி. குரல் மிருதுபட்டு இனிமையாய் எழும்பிற்று.

''தமிழ்றிந்த பெண்களிலே கவியெழுத வரச்சொல்லி
தொலைக்காட்சி நிலையத்தார் பாரதிக்கு நினைவெடுத்தார்.
பேராண்மைப் பெருஞ்சிங்கம் பெண்மையெனும் நல்மணியைக்
கண் மணியாய்க் கொண்ட கவி

கண்ணம்மா என்றழைத்து கொண்டாடிய முதல் புருஷன்
செல்லம்மா என்பவளை ஸ்நேகிதமாய் நேசித்தோன்
தமிழ் மொழியில் பேரிகையைத் தயக்கமின்றி முழக்கியவன்
குழலூதிக் காட்டியவன், குளிர்வீணை மீட்டியவன்
இசையினிலே மொழி தோய்த்துத் திசையெங்கும் வீசியவன்.

கூட்டம் சூள் கொட்டிற்று. கவியரங்கத் தலைவர் கண்மூடி ரசித்தார். யாரோ ஒரு இளைஞன் ''ஹா''. என்று குரல் எழுப்பினான்.

''அவனுக்கு அஞ்சலியாய் அவன் புகழ்ந்த பெண்மையினை
அவனின் அடிதொட்டு நான் பாட விழைகின்றேன்,
ஆளுயரப் பூமாலை அதற்கு மேல் மலர்க்கிரீடம்
அவசரத்தில் முகம் சுற்றி போடப்படும் பட்டுத்துணி
கைதட்டல் பொற்பதக்கம் பட்டப் பெயர் உதவித் தொகை
எதுவுமின்றி மறைந்து விட்ட என் கவியை
வணங்குகின்றேன்.''

இந்த முறை காமிரா வெகுதொலைவு நகர்ந்து கூட்டத்தோடு கல்பனாவைக் காட்டிற்று. ''சபாஷ்'' யாரோ எழுந்து நின்று கை தட்டினார்கள். கூட்டமும் தொடர்ந்து தட்டிற்று.

''பாரதியைப் பார்த்ததில்லை.
அவன் கவிக்குரலைக் கேட்டதில்லை
நான் பார்க்கக் கிடைத்ததெல்லாம்
நலிந்ததொரு புகைப்படம்தான்
வெறும் புகை...படம்தான்.
அந்தப் பெரும் நெருப்பெங்கே...?
துள்ளும் சுடர் ஒளியெங்கே?
அட...அட...அத்தனையும்!
அவனெழுதிய கவிதையிலே...
அவன்
நின்றதும்
நடந்ததும்
கிடந்ததும் என் நெஞ்சுள்ளே—''



கடைசி வரியைத் தெளிவாய், நிதானமாய், குரல் உயர்த்தி வாசித்தாள். கூட்டம் தலையசைத்தது. யாரோ ஒரு இளைஞன் முகம் பொத்தி வேதனைப்பட்டான். பாசுரத்து வரியை பாரதிக்கு உவப்பாய்ச் செருகியதற்கு கல்பனா சந்தோஷப்பட்டாள்.

''கவிஞனை வணங்கிவிட்டு என் கவிதைக்குள் நுழைகின்றேன்
பெண்மையெனும் பெருநெருப்பு தலைப்பாக இவர் தந்தார்.
குளிர் விட்டுப் போயிற்று இக்காலப் பெண்களுக்கு
என்றதொரு குற்றத்தை எல்லோரும் சொல்கையிலே
எதற்காக அத்தலைப்பு?—அதுவும் ஓர் பெண்கவிக்கு....''

திரும்பி கவியரங்கத் தலைவரைப் பார்த்து அழகாய்ச் சிரித்தாள். காமிரா நகர்ந்து சிரிப்பை வாங்கிக் கொண்டது.

''எரிகின்ற தீயினிலே நெய்யூற்றும் விளையாட்டா?
இல்லாத பெரு நெருப்பை ஏக்கமாய்ப் பார்ப்பதற்கா?
கிளறிவிட்டுப் பார்ப்போமே சாம்பலேனும் கிளம்பாதா
என்றதொரு முடிவுக்கு நிலையத்தார் வந்தாரா—?''

கூட்டம் வாய்விட்டுச் சிரித்தது. கை கொட்டிற்று. காமிரா அதையும் பதிந்து கொண்டது.

''சீதையினைக் கேளுங்கள் கண்ணகியைப் பாருங்கள்.
நளாயினி, தமயந்தி வரிசையிலே தேடுங்கள்
என்பதான காவியத்துப் பெண்களுக்கு மாறுதலாய்
இக்காலப் பெண்களுக்கு ஏற்றதொரு காரிகையாய்—நான்
சொல்லப் போவது அம்பையெனும் பெண் வாழ்வு.
அம்பையெனும் பெண் பெயரைக் கேட்டதாய் நினைவுண்டா?
பாரதத்தில் இவ்வரசி செய்ததேனும் நினைவுண்டா?
சினிமா நடிகையின் செல்லப் பெயரினை
செந்தமிழில் சுருக்கிவிட்டு சொல்வதாக நினைக்க வேண்டாம்
அம்பை நிஜப்பெயர்.''

கூட்டம் குனிந்து, நிமிர்ந்து அட்டகாசமாய் சிரித்தது. கல்பனா சிரிப்படங்கக் காத்திருந்தாள்.

''சால்வனெனும் இளவரசைக் காதலித்து சுயம்வரத்தில்
மாலையிடக் காத்திருந்த கன்னியவள் பேரழகி
பீஷ்மனெனும் பெயர் கொண்டோன், பிதாமகன்
என்று பலர் அழைக்கின்ற நரை கிழவன்
போரிட்டுச் சுயம்வரத்தைக் கலைத்துவிட....
கண்கலங்கிக் கடத்தப்பட்ட கன்னி தங்கை இருவருடன்
அலைக்கழிந்த பேதையிவள்
விசித்திர வீரியனைக் கட்டாயக் கல்யாணம்
செய்துவிடத் துடித்திட்ட பீஷ்மனையே எதிர்த்தவள்
சால்வனையே தன்மனதுள் வரிந்துவிட்ட சேதி சொல்ல
காதலனைத் தேடிப்போ என்றெனவே பீஷ்மன் விட
காதலனும் கை விரிக்க வீரியனும் மறுத்துவிட
பீஷ்மனையே அடிபணிந்து தனையேற்கக் கதறியழ
நரை கிழவன் மறுதலித்தான் தன் விரதம் பெரிது என...
'அம்பை கதையா இது...?
நம் அடுத்த வீட்டுப் பெண் கதை போல் இருக்கிறதே....'
என்றேதும் தோன்றுகிறதா
அன்றுமுதல் இன்றுவரை பாரதத்தில் பெண் வாழ்க்கை
தொடர்கதைதான், இப்படித்தான், வேதனைதான்,
சோதனைதான்...''

கூட்டம் விடாமல் கை தட்டிற்று. பின்னால் அமர்ந்திருந்த சக கவிஞர்கள் அதிகம் விழித்தார்கள். தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

கல்பனா திரும்பி சரசக்காவைப்பார்த்தாள். சுதாவை ஏறிட்டாள். அந்த அரையிருளில் அசையாது தன் மூத்த சகோதரிகள் தன் கவிதையுடன் இணைந்து விட்டதைக் கவனித்தாள். மூத்த அக்காவின் பத்து வயசுப் பையன் ரமேஷ்கூட ஒருவித பிரமிப்போடு இருந்தான். அம்பையின் கதை நிறைய பேருக்குப் புதிய விஷயமாய் இருந்தது.



டி. வி. யில் உள்ள பார்வையாளர் கூட்டம்கூட உறைந்து போய்க் கவனித்தது. சால்வனுக்கும் அம்பைக்கும் உள்ள காதலை, பீஷ்மர் இடையே புகுந்து சுயம்வரம் நிறுத்திப் போர்க் குரல் எழுப்பியதை, தேரில் மூன்று சகோதரிகளையும் மடக்கி எடுத்துப் போய்த் தன் தம்பி விசித்திர வீரியனுக்குக் கடிமணம் செய்து வைக்க முனைந்ததை, அம்பிகையும் அம்பாலிகையும் வழியின்றி மணத்திற்குச் சம்மதிக்க, அம்பை பீஷ்மரிடம் முடியாது என்று எதிர்த்ததை, பீஷ்மரைத் துரத்தி வந்த சால்வன் போரிட்டுத் தோற்றதை, அம்பையின் வேண்டுதலால் உயிர் பிழைத்ததை, அம்பை சால்வனை நேசித்தபடியால் தனக்கு வேண்டாம் என்று விசித்திர வீரியன் மறுத்து விட, அம்பையை சால்வனிடம் பீஷ்மர் அனுப்பியதை, சால்வனும் 'யுத்தத்தில் நான் தோற்ற கன்னியை தானமாய் அடைவது முடியாது' என்று திருப்பியதை, ஹஸ்தினாபுரத்திற்கும், சால்வன் அரண்மனைக்கும் பல முறை அம்பை அலைந்ததை, ஆறு வருட அழுகையை, களைத்து, கடத்தி வந்த என்னை நீரே கைப்பிடியும்' என்று பீஷ்மரிடம் கேட்க, தன் பிரம்மச்சரிய விரதம் கூறி பிதாமகர் மறுத்ததை, பிறகு 'என் கதிதான் என்ன' என்று அம்பை சிற, 'எனக்குத் தெரியாது' என்று பீஷ்மர் கை விரித்ததை, அம்பையின் கோபத்தை, கடும் தவத்தை, மறுபடி துருபதராஜனுக்கு மகளாய்ப் பிறந்து ஆறுமுகக் கடவுள் அளித்த மாலையைக் கழுத்தில் போட்டுக் கொண்டு வனம் சென்று மறுபடி தவம் செய்து, ஆண் தன்மை கொண்டு சிகண்டியாய் வில் தாங்கி, பீஷ்மர் மார்பு பிளந்த கதையை கல்பனா கவிதையாய் சொன்னாள்.

எந்த நியாயமுமின்றி பெண் மனம் அறியாது சுயம்வரம் கலைத்த பீஷ்மனின் தன்மையை ஆண் வர்க்கத்து நடவடிக்கைக்கு ஒப்பிட்டாள். பீஷ்மருக்கு அம்புப் படுக்கையும் உத்தராயணம் வரை மரண வேதனையும் ஏற்பட்டது அம்பையின் கோபத்தால் என்று கூறினாள்.

'பெண்ணை இழிவு' படுத்த முயற்சிப்போருக்கு இக்கதியே என்று இகழ்ந்தாள். 'ஆண் தன்மை கொள்ளுங்கள். இழிவை எதிர்த்துப் போர் செய்யுங்கள்' என்று பெண்களை அழைத்தாள்.

''அலியென்று சொல்லிற்று
அம்பையவள் வில்லெடுக்க
இருக்கட்டும் குறையென்ன
ஆண்வர்க்க புத்தியது.
இன்று வேலைக்குப் போகின்ற
என்னருமை பெண் குலத்தை
அலர் தூற்றும் காரியம்
அன்றைக்கே நடந்தம்மா.''

எவர் எது சொன்னாலும் போராட்டத்தைப் பெண்கள் கைவிடக் கூடாது என்றாள். அக்கினி அளித்த சீதையைக் காட்டிலும், ஊரை எரித்த கண்ணகியைக் காட்டிலும், தன்னைக் கிழித்தவனைத் தன் கையால் கொன்ற அம்பை உயர்வு என்றாள். பலத்த கை தட்டலுக்கு நடுவே கவிதையை முடித்தாள். மெல்ல நடந்து இருப்பிடம் அடைந்து சோர்வாய் அமர்ந்தாள். அமரும் வரை கூட்டம் கை தட்டிற்று.

அக்கா எழுந்து டி.வி.யை அணைத்தாள்.

''ஏங்க்கா.... இன்னும் ரெண்டு பேர் இருக்காளே—''

''வேண்டாம்டி. இதுவே காது நெறைஞ்சிருக்கு. வேற கேட்டா இந்த சுகம் கலைஞ்சு போகும். அப்புறம் பொண்ணே. என்ன அறிவு, எத்தனை அழகு. இத்தனை இருந்தும் இன்னும் விடிமோட்சம் வரலையேடி ஒனக்கு'' அக்கா நெருங்கி கல்பனாவை அணைத்துக் கொண்டாள். தலையைக் கோதி விட்டாள்.

''அப்பா இருந்து இதைப் பார்த்தா ரொம்ப சந்தோஷப்பட்டிருப்பார். ரெண்டு மூணு எடத்துல



எனக்கு கண்ல ஜலம் தளும்பிடுத்து. நன்னா இருக்கணும்டி பொண்ணே....'' உச்சி முகர்ந்தாள்.

''அதுவும் அந்த சால்வனை அவ லவ் பண்றான்னு சொன்ன இடம் டாப் க்ளாஸ் கல்பனா. எப்படி அது? நான் சொல்றது சரிதானா...?'' சுதா அக்கா நெருங்கி உட்கார்ந்தாள்.

''நெஞ்சைத் திறந்தவனை
நேசமிகு சால்வனை
விழியால் அணைத்துவிட்டு
தலையசைப்பில் வரவேற்று
மெல்ல அடி எடுத்து
மலர் மாலை தரை துவள
சுயம்வரத்தில் வலம் வந்தாள்
சுற்றியுள்ளோர் வாய் பிளக்க
வழிமறைத்த நரை கிழவன்
பீஷ்மனிடம் உதிர்த்துவிட்டு
வலம் திரும்பி சால்வனவன்
இடம் நோக்கி நடக்கின்றாள்
போர் சென்று குரல் கொடுத்தான்
பொல்லாத பீஷ்மனவன்
மெல்லத் திரும்பி விட்டு
மேலும் நடக்கின்றாள்....''

''யப்பா கொன்னுட்டேடி. எவ்ளோ நேரம் கை தட்டல். எவ்ளோ ஜீவிதமான வரிகள். 'லவ்னா எனக்குத் தெரியாது, ஆம்பளைன்னா எனக்குப் பிடிக்காதுன்னு அடிக்கடி சொல்றே. லவ் தெரியாதவளா இப்படி கவிதை எழுத முடியும்? பொய் சொல்றே கல்பனா. பெரிசா பொய் சொல்றே.''இடமும் வலமுமாய் இரண்டு சகோதரிகளும் பாராட்ட, கல்பனா முகத்தை அழுந்தத் துடைத்துக்கொண்டாள்.

''ரொம்ப கர்வமா இருக்குடி உன்னை நெனைக் கிறச்சே. நாளைக்குப் பாங்குக்குப் போனா அத்தனை பெரும் இது பத்தியே பேசப் போறா, பாரேன்.'' சுதா அக்கா தோளில் கை வைத்தாள். ''நானே போய் நாலு பேர் கிட்ட கேக்கப் போறேன், எப்படி இருந்தது ப்ரோக்ராம்னு...''

''எங்க ஸ்கூல்லயும் எல்லாரும் கேப்பா. எழுதினது இருக்கா கல்பனா? யாராவது கேட்டா படிக்கக் குடுக்கலாம்'' சரசு அக்கா கேட்டாள். எங்களுக்குத் தெரியலைடி. இந்தக் கவிதையெல்லாம் நம்மாத்துல யாருக்கும் தெரியாது நீ எப்படி கத்துண்ட...? 'தமிழ்ப் பாலை தினந்தோறும் வயிறு முட்டக் குடித்து விட்ட தைரியத்தில் எழுதுகின்றேன்' என்ன அழகான லைன். உன் கிட்ட இவ்ளோ விஷயம் இருக்குன்னு தெரியாதுடி எனக்கு. இப்படி அம்பை கதையை எழுதணும்னு எப்படித் தோணித்து...?''

கல்பனா பதில்பேசாது உட்கார்ந்திருந்தாள் கண்ணில் ஜலம் கட்டிற்று.

'நேசம் மிகுந்த உறவுகள். நெஞ்சார வரும் பாராட்டுக்கள். சண்டையே போடாத சகோதரிகள். தானே நின்று ஆண் துணையின்றி மேலேறும் குடும்பம். சோதனையும், வேதனையும் தாண்டி கல்விச் செருக்கோடு நின்றுவிட்ட குடும்பம் இது என் குடும்பம், என் உறவு, என் மக்கள். இந்தக் கைதட்டல் எல்லாம் இவர்களுக்குச் சொந்தம். இவர்களுக்கு இது சந்தோஷமெனில் இது மாதிரி எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்க முடியும். இவர்களது சந்தோஷத்திற்காக எது வேண்டு மானாலும் செய்யலாம்' கம்பனா கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''தாங்க்ஸ் அக்கா. தாங்க்ஸ் சுதா. இதெல்லாம் நீங்க போட்ட பிச்சை—ரெண்டு பேரும் ஓடி ஓடி வேலை



செய்து என்னைப் படிக்க வச்சேள். இந்த எம். ஏ. இங்கிலீஷ்ும், தமிழும், காலேஜ் வேலையும் கவிதையும் நீங்க எனக்குக் குடுத்த சொத்து. இதுக்கெல்லாம் நீங்க தான் காரணம்.''

''ச்சீசீ...என்னடி கண் கலங்கற...''

''நீங்களே படிக்க வச்சு நீங்களே பாராட்டறபோது அழுகைதான் வரது... அப்பா அம்மா இல்லாத போதும் அந்தக் குறை தெரியாம வளர்த்தேளே... அத நெனைக் கறப்பல்லாம் துக்கம் பொங்கறது. எத்தனையோ கஷ்டத்துக்கு நடுவேயும் மேலே வந்து நின்னுட்டத நெனைச்சா லேசா விசும்பத்தான் தோன்றது. யார் யாரோ மிதிச்சுப் போட்டிருக்கா. நம்மை அனாவசியமா அலைக்கழிச்சிருக்கா, வேதனைப்படுத்தியிருக்கா. இருந் தாலும் அத்தனையும் சமாளிச்சோம். அம்பை மாதிரி எதிர்த்துச் சண்டை போட்டு ஜெயிச்சோம். எனக்கு அம்பையோட கோவம் ரொம்பப் பிடிக்கும் அக்கா. தலைவிதியேன்னு உட்காராத பொண்ணு அவ.''

''அது சரி, அவளும் கடைசில சந்தோஷப்படலையே. சால்வன் கெடைக்கலியே...''

''வாஸ்தவம். புருஷன் கெடைக்காதது வேதனை தான். அதுக்காகக் கலைச்சவனை வுட்டுடலை பாத்தியா. பீஷ்மனைக் கதற அடிச்சுட்டா. என்னை அலைக்கழிச்சயா, உன்னை விட்டேனா பார்ன்னு ஆத்திரப்பட்டா. லவ் பெரிசுதான். அதுல தோத்துப் போய்ட்டா தலையெழுத்தேன்னு தொவண்டு போயிடக் கூடாது. தேர் மஸ்ட் பீ சம்திங் எல்ஸ் டு டு. பீஷ்மரோட மரணம் கௌரவர்களுக்குப் பெரிய அடி. பாண்டவர் களுக்கு அற்புதமான வெற்றி. பர்ஸனல் ப்ராப்ளம் முடிஞ்சுபோய் உலகத்து நன்மைக்கு, நல்லவர் பக்கம்— பாண்டவர் பக்கம் நின்னு சண்டை போட முடிஞ்சுது

அந்தப் பெண்ணால. லவ் தோத்துப் போச்சுன்னு முடிஞ்சுடலை அந்தப் பொண்ணு.''

''நீதான் லவ் பண்ணதேயில்லையே, பண்ணவும் மாட்டேன்னு சொல்லிண்டிருக்கச்சே எப்படி இந்த மாதிரி லவ் பத்தி எழுத முடிஞ்சது?''

''நானும் பொம்மனாட்டிதான் சுதா. மரக்கட்டையா. லவ் லவ்னு நீ கத்தினதை நான் பார்க்கலியா? உன் கண்ணுல எத்தனை கனா இருந்ததுன்னு எனக்குத் தெரியாதா? அந்தக் கனா எனக்குப் புரியாதா?''

சுதா தலை கவிழ்ந்தாள்.

ஆறு வருடம் முன்பு கலைந்த கனவு அது. பாங்கில் வேலை செய்தவன் பழக்கமாகி, பழக்கம் ஸ்நேகமாகி, ஸ்நேகம் காதலாகி, கை கோத்து ஊர் முழுவதும் சுற்றி கேட்டவர்களுக்கெல்லாம் விரைவில் திருமணம் என்று இருவருமே பதில் சொல்லி வலம் வருகையில் சட்டென்று ஒருநாளில் முறிந்து போயிற்று. தைரியமின்மையோ, வெறும் தந்திரமோ, உறவு தலைக்கேற்றிய மந்திரமோ, முறைப் பெண்ணை முப்பது சவரன் நகையோடு காதலித்தவன் திருமணம் செய்துகொண்டு விட்டான். 'மனசைத் தேற்றிக்கொள்' என்று ஆறுதல் எழுதினாள். சுதா 'மன்னித்து விடு' என்று கடிதம் எழுதினான். நாலு நாள் கட்டிலில் படுத்துப் புலம்பினாள். காதலில் தோற்றுப் போனதும், நம்பினவன் கைவிட்டதையும்விட இந்தக் குடும்பத்துக்குத் தன்னால் அவமானம் நேர்ந்து விட்டதே என்று வருந்தினாள். நல்ல ஆண் துணையை அழைத்து வந்து குடும்பச் சிறப்பை நிமிர்த்தி விடலாம் என்ற கனவு போனதற்கு அழுதாள்.

இருபத்திரண்டு வயசு அப்போது கல்பனாவுக்கு. ''பீடை போச்சுன்னு விடுடி. எதுக்கு அழுது உடம்பைக் கெடுத்துக்கறே?'' அணைத்துத் தேற்றினாள். ஊர்



முழுக்க மாற்றி மாற்றி வந்து அவன் கல்யாணத்தை இந்த வீட்டில் நின்று விசாரித்தது. அக்கா சரஸ்வதி அத்தனை பேருக்கும் பொறுமையாய்ப் பதில் சொன்னாள்.

உடம்பும் உயிரும் இந்த அவமானத் தீயில் பொசுங்கிய காயங்கள் மெல்ல உலர்ந்து உதிர்ந்து தழும்பும் மறையும் காலத்தில் கவியரங்கம் கிளறி விட்டது.

''அப்போ இன்னிய கவிதைக்கு நான் காரணமா, என் வாழ்க்கை உன் நெஞ்சில் விளைவித்த எதிரொலியா...?''

''யெஸ். அவன் திடும்னு எவளையோ கல்யாணம் பண்ணிண்டு வந்து உனக்கு 'மன்னிச்சுடு'ன்னு லெட்டர் எழுதினான். நீயும் மேற்கொண்டு என்ன பண்றதுன்னு தெரியாம மன்னிச்சுட்டே. என்னால அப்படி மன்னிக்க முடியாதுடி. உன் எடத்துல நான் இருந்தா அவனைக் கண்டதுண்டமாக்கியிருப்பேன். நடுரோடுக்கு இழுத்துண்டு வந்து ஓடற லாரிக்கு அடில தள்ளியிருப்பேன். நம்ம வீட்டு மனுஷா யாரும் அவனைப் பார்க்க, கேக்க போகக் கூடாதுன்னு நீ கட்டிப் போட்டுட்டே பாஸ்டர்ட்—எவ்வளோ சுலபமா லெட்டர் எழுதினான் மன்னிச்சுடுன்னு...''

''போறும் விடு. செத்த பாம்பை அடிக்க ஆரம்பிப்பானேன்...?'' சரசு அக்கா கல்பனாவை மெல்ல அடக்கினாள்.

''சும்மா இருக்கா. சுதாவை லவ் பண்ணின தடியனை மட்டுமில்லே, உன் புருஷனையும் கட்டி வச்சு ஒதைக்கணும்னு வெறி இருக்கு எனக்குள்ளே...''

''அதுதான் பரலோகம் போய்ச் சேர்ந்தாச்சே. இன்னும் எதுக்கு சண்டை, செத்துப் போனவாகிட்ட...?''

"வெறுமையா செத்துப் போனா... அத்திம்பேர்? நம்ம மூணு பேரையும் வேக வெச்சுட்டுல்ல போனார்... யப்பா...எத்தனை அடி, எத்தனை உதை நீ வாங்கி யிருக்கே. நாள் தவறாம குடிச்சுட்டு கலாட்டா, எக் காளம்...நெஜம்மா சொல்றேன். அந்த நேரம் எனக்கும் குடிக்கணும்னு தோணித்து...குடிச்சு விறகு கட்டையால எதிர்பட்டவன் மண்டையிலே போடணும்னு தோணித்து. அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக் வந்ததுக்குக் காரணமே, அவர் கோமால செத்ததுக்குக் காரணமே, அந்த பாவி தான். சனி செத்துப்போச்சோ நிம்மதியா இருக்கோமோ. என்ன பயங்கரம், எத்தனை விதமான பயமுறுத்தல்... கோழைகள், பொட்டச்சிகிட்ட மட்டும் வீரம் காட்டற கோழைகள்."

"போறும்டீ கல்பனா. கவிதை கேட்டு சுகமா இருக்கற காதுல ஈயத்தக் காய்ச்சி ஊத்தாதே..."

"சுகமா கவிதை பாடறவ இல்லக்கா நான்...சுகத்துக் காக கவிதை எழுதல. திபுதிபுன்னு ஊரை எரிய வைக்க எழுதறேன். என் வயிறு எரியறது, எழுதறேன்."

"ஈஸி... ஈஸி... கல்பனா. உணர்ச்சி வசப் படாதே...." —சுதா தட்டிக் கொடுத்தாள்.

"தட்டு வைக்கிறேன். சாப்பிட வாங்கோ." பெரி யக்கா ஜன்னலைத் திறந்தாள். வீட்டுள் சூரிய வெளிச்சம் பாய்ந்தது. கல்பனா வெளிச்சத்திற்குக் கண் சுருங்கி, பிறகு மெல்ல மலர்ந்தாள். மனசு லேசாயிற்று.

இது சொந்த வீடு. வீடு முழுக்க மொசைக் தரை. குளிர் வர்ண டிஸ்டம்பர், ஊஞ்சல், கலர் டி. வி., அரவை இயந்திரம், குளிர்பெட்டி, வாஷ்பேஸின், காஸ் அடுப்பு. எல்லா சௌகர்யமும் பெண்கள் சம்பாதித்த சொத்து.

சரசு அக்கா செகண்டரி கிரேட் டீச்சர். வெகு அருகே பள்ளிக்கூடம். அவள் பிள்ளை ரமேஷூம் அதே பள்ளியில்தான் படிக்கிறான்.



அடுத்தவள் சுதா. பாங்க் உத்தியோகம். வட சென்னையில் பெரிய கிளை. பிற்பகலில் வீடு வந்துவிட முடியும்.

கல்பனா மவுண்ட்ரோடில் உள்ள பெண்கள் கல்லூரியில் துணைப் பேராசிரியர். மாலையில் நாலு பெண்கள் வீட்டுக்கு வந்து பாடம் கேட்டு விட்டுப் போகும்.

கடந்த ஆறு வருடமாய் வருமானத்திற்குக் குறை வில்லை. வசதிகள் சிறுகச் சிறுக வளர்ந்து கொண் டிருந்ததே தவிர, குறையவில்லை.

விதவையும், காதலில் தோற்றவளும், கன்னிப் பருவம் கடந்து கல்யாணச் சிந்தனையே இல்லாத பெண்ணுமாய் சேர்ந்து அவரவர் வேலையை அவரவர் பார்த்து அமைதியாய்க் குடித்தனம் நடத்த முடிந்தது. சரசக் காவின் பத்து வயசுப் பிள்ளையின் துணை போதும் என்று பெண்களாய் முன்னேற முடிந்தது.

காலை சமையலை சரசக்கா செய்துவிடுவாள். மாலை டிபனும் இரவு சாதமும் சுதா செய்து இறக்கி விடுவாள். கூடமாட ஒத்தாசை, வீட்டு நிர்வாகம், வெளி உலகத் தொடர்பு, தேவைப்பட்டதைத் தேவைப்பட்ட நேரத்தில் வாங்கி வரும் பொறுப்பு கல்பனாவிடம் இருந்தது. வருமான வரியோ, இன்ஷூரன்ஸோ, மின் கட்டணமோ, பம்ப் ரிப்பேரோ எல்லாவற்றையும் ஆண் துணையின்றி அவர்களாகவே செய்து கொள்ள முடிந்தது.

எதற்கு ஆண் துணை? அதுவும் இந்தக் காலத்தில்...? ஆண் ஒரு இடைஞ்சல். அமைதிக்குப் பங்கம். வெறும் அட்டகாசம். தம்பட்டம். ஆண் என்று வீட்டில் எந்தப் பிராணியும் இல்லாதது ஒரு வசதி. வெறும் பாவாடையும் ஜாக்கெட்டுமாய்க் காலை ஏழு மணி வரை படுக்கையில் புரளும் சௌகர்யம். உச்சியில் எண்ணெய் தேய்த்து

நடுக்கூடத்தில் உலவும் சுதந்திரம். காலைத் தூக்கி டி. வி. ஸ்டாண்டில் போட்டுக் கொண்டு, மடியில் உப்புமா தட்டோடு உட்காரும் விட்டேத்தி. கை கட்ட வேண்டாத, கதவுக்குப் பின் மறையாத விடுதலை. போலி மரியாதையும் சுய கௌரவ அழிவும் கொள்ள வேண்டியிராத நிலை.

இந்த வீடு அப்படித்தான் இருக்கிறது.

போன தீபாவளிக்கு எல்லோருமாய் நாலு புதுப் படம் பார்க்க முடிந்தது. ஆயிரத்து நூறு ரூபாய் பட்டுப் புடவை எடுக்க முடிந்தது. கெட்டுப் போனாலும் பரவாயில்லை என்று சிரித்துச் சிரித்துப் பேசியபடி மைசூர்பாகு கிளறி முடிந்தது. அதிரசம் தட்ட முடிந்தது. மைசூர்பாகு விரலில் தூக்க, துவண்டு கொண்டது. அதிரசம் விள்ள முடியாமற் போயிற்று. ஏன் இப்படி என்று கேட்க ஆளே இல்லாத சுதந்திரத்தைப் பரிபூரணமாய் அனுபவிக்க முடிந்தது.

இது வீடு. இதுதான் வீடு.

வீடு என்பது விடுதலையான இடம். எந்த இடத்தில் கால் நீட்டி மல்லாந்து கவலையின்றிச் சாய முடியுமோ, அசந்து தூங்க முடியுமோ, பயமின்றி உலவ முடியுமோ அதுவே வீடு, வீடு என்பது விடுதலையான இடம்.

ஆனால் சரசு அக்காவுக்கு இந்த விடுதலை சிரமமாய் இருக்கிறது போலும். வர வர நச்சரிக்க ஆரம்பித்து விட்டாள். 'கல்யாணம் பண்ணிக்கோடி, கல்யாணம் பண்ணிக்கோடி' என்று நச்சரிக்க ஆரம்பித்து விட்டாள். இரண்டு முறை தூக்கியெறிந்து பேசிவிட்டாலும் மனசில் போட்டுக் கொள்ளாது மறுபடி மறுபடி கேட்க ஆரம்பித்து விட்டாள்.

இப்போது தட்டு பரப்பிச் சோறு போடும்போது திரும்பவும் ஆரம்பித்து விடுவாள்.



''ஏன் கூன் போடாது உடம்பு? அதது காலாகாலத்துல நடந்தா உடம்பும் உடம்பா இருக்கும். சிக்குன்னு இருந்த உடம்பு நெக்குவிட ஆரம்பிச்சாச்சு. இந்த வருஷத்துக்குள் கல்யாணம் பண்ணிட்டா நல்லது. முப்பதுலயும், முப்பத்தஞ்சிலயும் பண்ணி எதுவும் முடியாம. அசரக் கெடக்கவா கல்யாணம்....''

''போறும், குழம்பு. காய் வேண்டாம்.''

''ஏன் வேண்டாம். தேங்காயக் கொட்டி கோசு பண்ணி வச்சிருக்கு.''

''ம். தெரியும். கார்த்தால பாத்ரூம் முழுக்க கோசு நாத்தம் நாறித்து. எனக்கு வேண்டாம்.''

''வடிச்ச ஜலம்தான் நாறும். கறிக்கென்ன...?''

''அந்த ஜலநாத்தம் பார்த்துதான் வேண்டாங்கறேன்.''

''ஓஹோ...புள்ளே பெத்துக்க பயந்துண்டு கல்யாணம் வேண்டாங்கற மாதிரி''

''ஷட் அப், ஐ ஸே. போறும் கல்யாணப் பேச்சு.''

''சரி. நான் ஷட் அப். ஊர்ல எல்லாரும் விசாரிக்கறாளே... அவர்களுக்கு என்ன பதில் சொல்றது....''

''ஊர் விசாரிப்புக்கென்ன... உன் புருஷன் செத்ததுக்கு விசாரிச்சா. இவளைக் கைவிட்டவனை விசாரிச்சா. அப்பா செத்துப் போனதுக்கு துக்கம் கேட்டா. இப்படி எதுவும் இடைஞ்சல் இல்லேன்னா எதுல வரும்னு என் கல்யாணம் பத்தி விசாரிப்பா... விசாரிப்புக்கு பயந்து கல்யாணம் பண்ணிக்க முடியுமா... என்ன? வேண்டாம் காய் போடாதே.''

''என் புருஷன் செத்துப் போனாங்கறதுக்கு நீ ஏன் வெறும இருக்கணும்? அவளுக்கு...என்னமோ நடந்த

துன்னா நீ ஏன் ஒதுங்கிப் போகணும்? அவளுக்கு ரெண்டுலே சனி. இரண்டாமிடம் குடும்ப ஸ்தானம்.''

''போரடிக்காதக்கா....''

''எங்களைப் பார்த்து நீ மாட்டேன்னு சொல்லாத கல்பனா.''

''சொல்லுவேன். நிச்சயம் சொல்லுவேன். அப்பா பாத்து செஞ்சு வெச்ச கல்யாணம்தான் உன்னுது. உருப் படியா குடித்தனம் பண்ண முடிஞ்சுதா உன்னாலே....? கல்யாணமான மறு வாரமே செருப்பால பெண்டாட்டிய அடிச்ச மிருகம். கடைசில எப்படிச் செத்துப் போனான் உம் புருஷன்? குடிச்சுக் குடிச்சு வயிறு வெந்து செத்துப் போனான். என்னாலெல்லாம் அந்த மாதிரி வாழ்க்கை ஒரு நிமிஷம்கூட வாழ முடியாது. இதோ இந்த மகராசி லவ்வோ லவ்வுன்னு சுத்தினா. அவன் பொறந்த நாளுக்கு, இவ பொறந்த நாளுக்கு, பண்டிகை கருமாதி எல்லாத் துக்கும் அவனுக்குத் துணி எடுத்துக் குடுப்பா. தங்கத்துல செயின் பண்ணிப் போட்டா. பத்து ரூபாய்க்கு ஒரு ரவிக்கைத் துணி வாங்கிக் குடுத்திருப்பானா, அந்த ராஸ்கல்....?''

''கல்பனா, ஸ்கிப் இட்....'' சுதா சட்டென்று அதட்டி னாள்.

''போடி, பேச்சுன்னு வந்தா சொல்லத்தான் சொல் வேன். சட்டமா கால்மேல் கால் போட்டுண்டு எத்தனை நாள் சாயங்கால டிபன் சாப்பிட்டிருக்கான், காபி குடிச் சிருக்கான் இந்தாத்துல. உண்ட வீட்டுக்கு ரெண்டகம் பண்ணிட்டானே.... சூடு, சொரணை உள்ளவனா யிருந்தா தூக்கு மாட்டிண்டு சாகணும்.''

''யாரை வையறே? எதுக்கு வையறே? இப்போ உன் கல்யாணம் பத்திதான் பேச்சு. எதுக்கு அனாவசியமா இதெல்லாம் இழுக்கறே? நான் கெட்டுப் போனதுக்கு



யார் காரணம்னு இப்போ யார் கேட்டா....?''—சுதா சோற்றை அளைந்தபடி பேசினாள்.

''அப்போ என்னையும் கேக்காதிங்க. உங்க ரெண்டு பேர் வாழ்க்கையும் வீணாப் போனதை பாத்து இடிஞ்சு போயிருக்கேன். உன்னைக் கைவிட்டு அவன் வேற கல்யாணம் பண்ணிக்கறச்சே, எனக்கு இருபத்திரண்டு வயசாடி...? அந்த நாலு நாளும் நான் தூங்கவே யில்லைடி. நீ பாத்ரூம் போனாகூட கதவு ஓட்டை வழியா உன்னைக் கவனிப்பேன். மாத்திரை சாப்பிடுவியோ, தூக்கு மாட்டிப்பியோன்னு பயந்து பயந்து உன் பின் னாலேயே சுத்துவேன். நெஞ்சில நெருப்பு வச்சிருந்த மாதிரின்னா இருந்தது...நீ மட்டும் செத்துப் போயிருந்தா நானும் உயிரோட இருந்திருக்க மாட்டேன்டி....''

''ச்சீ போ, அசடு. உங்களை விட்டு எப்படி என்னால போக முடியும்? உங்களுக்கு கஷ்டம், அவமானம்னு அழுதேனே, தவிர வேற என்ன செய்துக்கறது நியாயம்?''

''யெஸ். அதனாலதான் சொல்றேன். திரும்பவும் ஒரு அவமானம், கஷ்டம் நம் வீட்டுக்கு வரவேண்டாம்.''

''உனக்கும் இதே மாதிரிதான் வரும்னு என்ன நிச்சயம்?''

''வராதுன்னு என்ன நிச்சயம், சொல்லு...?''

''கெடுதலாவா யோசிக்க முடியுப்?''

''நம்ப வீட்ல நல்லதுன்னு இதுவரை என்ன நடந் திருக்கு. சொல்லு பார்க்கலாம்...''

''என்ன கல்பனா, விதண்டாவாதம் பண்றே...?''

''நல்லதும் வேண்டாம், கெட்டதுப் வேண்டாம். இந்த நிம்மதி, இந்த வாழ்க்கை போறும். எதேஷ்டம், என்ன குறைச்சல்டி நமக்கு? ஆறு வருஷம் நிம்மதியா, அனுசரணையா இருந்து உசந்து வந்திருக்கோம். என்ன

கஷ்டம் இப்ப நமக்கு? சொந்த வீடு, வீடு நிறைய பாத்திரம் பண்டம், பாங்க்குல காசு, இருபத்தேழு தேதிக்கு கைல ஆயிரம் ரூபா மிஞ்சறது. வருஷம் தவறாம ஊர் சுத்தறோம். எல்லாத்தையும்விட, நிம்மதியா தூங்க றோம். அதைச் சொல்லு.''

''நிம்மதியா தூங்கறதுக்கா கல்யாணம் வேண்டாங் கறே?''—சரசு அக்கா சன்னத்தில் கை வைத்து வியந் தாள்.

''யெஸ். அப்படித்தான் வச்சுக்கோயேன்.''

''பின்னால வருத்தப்படுவ—''

''ஏன் வருத்தப்படணும்?''

''அக்கா ரெண்டுபேரையும் பாத்து வாழாதபோய்ட் டோம்னு நாப்பது வயசுல தோணும். குழந்தை ஆசை வரும். கல்யாணம் கார்த்தின்னு போகும்போது 'எனக்குக் குழந்தையில்லையே சீர் பண்றதுக்கு'ன்னு தோணும்.''

''ஏன்...? உன் புள்ளை என் புள்ளையில்லையோ...? ரமேஷுக்கு சீர் பண்ண மாட்டேனா...? ஸ்கூட்டரோ, மோட்டார் சைக்கிளோ சித்தி வாங்கிக் குடுத்தா ஆகாதா...? உம் புள்ளை உன்னைவிட எங்கிட்டதான் உசிரா இருக்கான். அது போறும் எனக்கு.''

''இது போறாதுடி. நல்லதோ கெட்டதோ நான் வாழ்ந்து அறுத்தவோ. அவ வாழாம போனாலும் புருஷ ஸ்நேகிதம் தெரிஞ்சவோ. இப்படி எதுவுமே இல்லாத வெறும் தரைக்கொடியா போகக் கூடாதுடி.''

''நௌ யூ மீன் செக்ஸ்...? உடம்பு சமாச்சாரம். ஆம்பளை ருசி தெரியாம நான் சாகக் கூடாதுங்கறே...? எனக்கு அது வேண்டாம். அப்படியே எனக்கு முதுகு அரிச்சுதுன்னா, தேச்சுக்கவோ, தீச்சுக்கவோ தெரியும்.''



''ச்சீ, என்ன பேச்சு இது? கன்னிப் பெண்ணா, லட்சணமாவா பேசற நீ...?''

''ஹூ செட்? நான் கன்னின்னு யார் சொன்னா?''

''என்னடீ இது...தலைல கல்லப் போடற?''

''கல்யாணம்தானக்கா கல்லு. பெரிய பாறாங்கல்லு. அதைத் தூக்கி என் தலைல போடறேங்கறியே...''

''சொல்லுடி. நீ சொல்றது நெஜம்மா?''

''என்ன நெஜம்மா?''

''கன்னிப் பொண்ணாத்தான இருக்கே...நீ...?''

''ஏன்? இல்லேன்னு சொன்னா கழுத்து நெரிச்சுக் கொன்னுடுவியா?''

''எனக்குப் புரியலை கல்பனா. நம்ப வீட்டுப் பெண் களுக்கு மட்டும் ஏன் இந்தத் தலையெழுத்து... ஊர்ல எத்தனை பெண்கள் கல்யாணம் பண்ணிக் குழந்தை குட்டிகளோட குடித்தனம் பண்ணிண்டிருக்கா. அது நமக்கு ஏன் வாய்க்கலைன்னு தெரியலை. யார் குடியைக் கெடுத்தோம்? எப்போ எந்தக் கல்யாணத்தைக் கலைச்சோமோ தெரியலை.''

''நீ கெடந்து புலம்பு. நான் கையலம்பறேன்.'' கல்பனா உதறி எழுந்தாள்.

''எனக்கு உடம்பு முழுக்க அலம்பிக்கணும் போல இருக்கு.'' சரசக்கா தலையில் அடித்துக்கொண்டாள்.

''நான் பேசினதுக்காகவா...? கெட்ட பேச்சுக்கே அலம்பிக்கணும்னா, நான் நெஜமாகவே கெட்டுப் போயிருந்தா என்ன செய்வே?''

''அப்போ?''

''நான் க்ளீன் ஸ்லேட். சின்ன தப்புகூட பண்ணாதவ. பண்ணமாட்டேன். உன் குழந்தைமேல சத்தியம்.''

''அப்போ கல்யாணத்துக்கு சரின்னு சொல்லுடி. நல்ல பையனா நான் பார்க்கறேன்.''

''கல்யாணம்கூட கெட்ட காரியம்னுதான் படறது எனக்கு. ஸோ லீவ் மி அலோன்.''

கல்பனா எழுந்து கையலம்ப போனாள். சுதாவும் சரசுவும் சோற்றுக் கலத்தை வெறித்துக் கொண்டிருந் தார்கள்.

''நம்மாலதான் அந்தக் குழந்தைக்கு வெறுப்பு வந்துடுத்து.'' சரசு கண்ணை கசக்கி அழுதாள்.

''என்ன அழகு...உதடும், மாரும், உயரமும், மைக் லேர்ந்து திரும்பி நடக்கறப்போ டி.வி.ல காமிச்சான். வீணைக் குடம் மாதிரி இடுப்பு. எவ்வளவு தெளிவா பேசறா—சூட்சுமமா கவிதை எழுதறா. இவளுக்கு ஒருத்தன் உலகத்துல இல்லாதயா போய்டுவான். பகவானே; இவ்வளவு பெரிய பொக்கிஷமா வேண்டாம்னு ஒரு ஆம்பளை தள்ளுவான். தேடினா கெடைக்கவா மாட்டான்?''

''நீ பாட்டுக்குத் தேட ஆரம்பிக்கா. நானும் விசாரிக்கறேன். ஜாதகம் ப்ரிண்ட் பண்ணக் கொடுத்து நாலு மேரேஜ் பீரோவுக்கு அனுப்பலாம். இவளை எதுக் குக் கேக்கணும்?''

''என்னைக் கேக்காம ஏதாவது செஞ்சா நொறுக்கித் தள்ளிடுவேன். எவனாவது பெண் பார்க்கறதுக்குன்னு உள்ள வந்தா, மரியாதை கெட்டுப் போயிடும், ஆமா...'' கையலம்பின கல்பனா பாத்திரங்களை எடுத்து வைத்தாள்.



''ஆங்காரி.... வாய அடக்கு. பெரியவங்க மரியாதை இல்லாம...'' சரசு அக்கா அதட்டினாள்.

''ரொம்ப மரியாதை இருக்கு. ஆனா, நீங்கதான் அனாவசியமா கெடுத்துக்கறேள்.''

''உன் வாழ்க்கைல அக்கறை இருக்கிறவாடீ நாங்க ரெண்டு பேரும்''— சுதா குரல் உயர்த்தினாள்.

''அதே அக்கறை உங்கமேல எனக்கும் இருக்கும்.''

''என்ன கிழியற அக்கறை....?''

''நாளைக்கு என்னைப் பெண் பார்க்க வர்றவன் கேட்பான். 'உங்க அத்திம்பேர் குடிச்சிட்டு வருவாராமே, நெஜமா? உங்க அக்கா யாரோ வேற ஜாதிப் பையனோட ஊர் சுத்தினாளாமே நெஜம்மா'ன்னா என்னால தாங்கமுடியாது.''

''ஸோ, என் நடவடிக்கை உன்னை இப்போ தொந்தரவு பண்றது. நான் அன்னிக்கு... நீ சொன்னபடி மாத்திரை முழுங்கி செத்துத் தொலைஞ்சிருந்தா, இன்னிக்குத் தாலியும் கழுத்துமா நின்னிருப்ப.:'

''தூக்கும் கழுத்துமா நின்னுருப்பேன். நீ செத்த பிறகு ஒரே அரிவாளால் உன் ரோசம் கெட்ட ஆளையும், அவன் மொறப் பெண்ணையும் வெட்டிப் போட்டுட்டுத் தூக்குல நின்னுருப்பேன்.''

''என்ன சொல்ற கல்பனா?''

''உங்களை அவமானப் படுத்தினா என்னை அவமானப் படுத்தற மாதிரி.''

''புரியலையேடி.''

''உன் வாழ்க்கையோ இவ வாழ்க்கையோ ஏன் பாழாச்சுன்னு நான் ஆராய்ச்சி பண்ணலை. இதுக்கு மேல இனிமே எந்தப் பிரச்சனையும் வராம இருக்கணும்.

என்னால, என்னைக் கட்டிக்கப் போற புருஷனால வரக்
கூடாது. எனக்குத் தாலி கட்டின ஒரே காரணத்தை வச்சு
எவனோ ஒருத்தன் உங்களை அவமரியாதையா நடத்த
உங்களை ஆராய்ச்சி பண்றது எனக்கு இஷ்டமில்லை.
இதையெல்லாம் விட முக்கியம் இருபத்தெட்டு வயசுவரை
ரெண்டு அக்காவோட இருந்தாச்சு. இனி சொச்ச
காலமும் உங்களோடதான் இருப்பேன். உங்களை
நிர்க்கதியா விட்டுட்டு எவன் பின்னாலயோ புருஷனே
கதின்னு ஓடமாட்டேன், என்னுடைய முக்கியமான
ரெஸ்பான்ஸிபிலிட்டி என் ரெண்டு அக்கா. அக்கா
பிள்ளை ரமேஷ், இவா அத்தனை பேரையும் மனசுல
ஏத்துண்டு என்னையும் பொண்டாட்டியா மதிக்கிற
ஆம்பளைதான் எனக்குப் புருஷன். அப்படி ஒரு புருஷன்
இருக்கிறதா எனக்குத் தெரியலை. இந்த வீட்டிலே மாப்
பிள்ளையா ரெண்டு முதிர்ந்த மச்சினியோட வளைய வர
எவனுக்கும் மனசு இருக்காது. அது சிரமந்தான்.
ஸோ. என் கல்யாணம் முடிஞ்சு போன சேப்டர்.
அதப்பத்தி பேசிப் பேசி பொழுத வீணாக்க
வேண்டாம்.''

''நியாயமா, நீ பேசறது...''

''இல்லேன்னு வச்சுக்குவோம். அதான் நிலைமை.
இந்த வீட்டு நிலைமை.''

''எவன் வருவான்—எல்லாத்தையும் விட்டுட்டு உம்
பின்னாடி? பெண்டாட்டிக்கு அடங்கின புருஷனா...
வீட்டு மாப்பிள்ளையா—''

''வர வேண்டாம்.''

''நல்லா, யோக்யதையா இருக்கிற குடும்பத்துப்
பொண்ணுங்களுக்கே ஆயிரம் விட்டுக் கொடுத்துக்
கல்யாணம் பண்ண வேண்டியிருக்கு. சருகா
இருந்தாலும் சம்பந்தின்னா எழுந்து நிக்க வேண்டி



யிருக்கு. இப்படி கண்டிஷன் போட்டா என்னிக்குக்
கல்யாணம் நடக்கும்?''

''நிச்சயமா நடக்காது.''

''இப்படியேதான் இருக்கப் போறியா?''

''யெஸ். ஜாலியா, விட்டேத்தியா...''

''பொய் சொல்லாதடி.''

''இல்லேக்கா. நெஜம் சொல்றேன். உங்க ரெண்டு
பேர் கஷ்டமும், இனி என்னால பார்க்கவே முடியாது.
நீங்க பட்டது போறும்.''

''எனக்குச் சோறே இறங்கலை, போ...''

''இரு. நான் ஊட்டி விடறேன்.''

''வேண்டாம் கல்பனா. இறங்கின சோறே நெஞ்சுல
அடைக்கிறது.''

''மடமடன்னு ரெண்டு டம்ளர் ஜலம் குடிச்சு
ஜீரணம் பண்ணு. நிஜம் சிரமம்தானக்கா, முழுங்கிடணும்.
பேசாம ஏத்துக்கணும். இரண்டும் கெட்டானா
தொண்டைல வச்சு ஏன் அவஸ்தைப் படணும்? நம்ம
வீட்டு நிலைமைக்கு என் கல்யாணம் சரிப்பட்டு
வராதுக்கா. இதுல ஒன்னும் எனக்கு வருத்தமேயில்லை.
நான் எப்பவோ ஜலம் குடிச்சு முழுங்கிட்டேன். என்
கல்யாணம் உங்களை வேதனைப் படுத்தும். நிச்சயமா
ஏதாவது வந்து, மனசு நோக பண்ணும். சும்மா இரு.''

சரசு அப்போதைக்கு அடங்கினாள்.

இரவு சாப்பாடு முடிந்து உடம்பில் இருக்கிற
அத்தனை துணியையும் அவிழ்த்துப் போட்டு மெல்லிய
நைட்டியில் மெத்தென்ற படுக்கையில் மல்லாந்து
புத்தகத்துடன் கிடக்கும்போது, சுதா அருகில் வந்து
அமர்ந்துகொண்டாள். தலையைக் கோதிக் கழுத்தை

நீவித் தோளைத் தடவினாள். ஒண்டிக் கொண்டபோது முதுகைத் தடவி, புஜங்களைப் பிடித்து விட்டாள்.

''எனக்கு அந்த டி.வி.ல காமிச்ச உன் முகமே நிக்கறதுடி'' என்றாள். ''நகர்ந்துக்கோயேன், நானும் படுத்துக்கறேன்'' என்று கல்பனாவின் படுக்கையில் சாய்ந்தாள். நெருங்கி இடுப்பைச் சுற்றிக் கை போட்டுக் கொண்டாள்.

''அட... என்ன ரொமாண்டிக் மூட்ல இருக்கே?''

''ஆமா. எங்களுக்குத்தான் ரொமான்ஸ். இந்தம் மாக்கு எதுவுமேயில்லை...வேஷம் போடாதடி.''

''சரி... சரி... இப்ப எதுக்கு அடிபோடற?''

''நெஜம்மாவே உனக்குள்ள கனா எதுவும் இல்லையா?''

''ஏன் நம்பறது கஷ்டமா இருக்கா?''

''தோத்துப்போன எனக்கே, இந்த மாதிரி புத்தி இருக்கறச்சே, உனக்கு இல்லேன்னா எப்படி நம்பறது?''

''என்ன மாதிரி புத்தி? என்ன மாதிரி கனா?''

''வெல், குடித்தனம் பண்ற புத்திதான்.''

''ஒரு வேளை பழசை ஞாபகப்படுத்திக்கறயோ?''

''இல்லை, புதுசு புதுசுதான் கனவு காண்றேன். பழைய முகம் மறந்தே போச்சு. அவனுடைய எல்லா செயலும், சொல்லும் பொய், போலின்னு இப்ப தோன்றதாலே அது ஞாபகம் வரதில்லே. வந்தாலும் ஒதுங்கிடறது.''

சுதாவின் பேச்சுக்கு கல்பனா நெடுமூச்சு விட்டாள்.

''உனக்குத் தனியா இப்படி இருக்கறது சிரமமா இருந்தா, நீ கல்யாணம் பண்ணிக்கோயேன் சுதா.''



''எப்படி முடியும் கல்பனா? அதிகமா அலைஞ்சுட்டனே... ஊர் சிரிக்கும்படியா முடிஞ்சிடுத்தே...''

''ஆறு வருஷ கதைடீ... யாருக்கு ஞாபகம் இருக்கும்?''

''எனக்கு கல்யாணம்னா உடனேயே ஊருக்கு ஞாபகம் வந்துடும். அந்த ஊர் சுத்தின பொண்ணுதானே இதுன்னு கேட்கும்.''

''கேட்டுட்டுப் போறது. ஆமான்னு சொல்லுவோம்.

''ஊர் கேட்டா சொல்லலாம். உறவு கேட்டா...? புருஷன் கேட்டா...? நாத்தனாரோ, மாமியாரோ துருவித் துருவிக் கேட்டா...? அவன் உன்னை எங்கல்லாம் தொட்டான்னு எழுதிக் குடுன்னு கேட்டா?''

''கேக்காதவனும் இருப்பான் சுதா.''

''நம்பறேன். இது ஒண்ணும் பெரிய விஷயமில்லைன்னு சொல்றவன் கிடைச்சா நல்லது. அப்படிப்பட்டவன்னு தெரிஞ்சா....''

''தெரிஞ்சா....?''

''சட்டுன்னு உனக்குக் கல்யாணம் பண்ணி வச்சுடலாம்.''

''என்னடி சுதா, விளையாடறியா? ஆட்டைக் கடிச்சு மாட்டைக் கடிச்சு கடைசீல ஆளை கடிக்கத்தான் படுக்கைல வந்து கட்டிண்டயா...?''

''என்னை எவனாவது கேலி பண்ணுவான்னுதானே நீ கல்யாணம் வேண்டாங்கறே. என் விஷயத்தையே சரின்னு ஒத்துண்டுடறவன் அக்காவ கேலி பண்ணுவாளா...''

''ஸோ, என் கல்யாணப் பேச்சு இன்னும் விடலே...''

''எப்படி விட முடியும் கல்பனா? அக்கா வாழ்க்கை சரியில்லை. என்னுடையதும் தோத்துப் போச்சு. இதுக் காக நீ கல்யாண முயற்சியே இல்லாம இருக்கறது தப்பு கல்பனா. கோபப்படாதே. உனக்கு நல்லவனா, நமக்குப் பாந்தமா யாராவது இருப்பான்.''

''வீட்டோட இருப்பானா...''

''இப்படியெல்லாம் 'சம்ப்பெல்' பண்ண முடியுமா?''

''முடிஞ்சா வரட்டும். ஒண்ணும் கட்டாயமில்லை...''

''முயற்சி பண்ணிப் பார்ப்போமா?''

''எப்படி பண்ணப் போறே?''

''விளம்பரம் கொடுக்கலாம்.''

''என்னன்னு...?''

''வீட்டோட மாப்பிள்ளையா வேணும்னு...''

''சரி, நாளைக்கு யோசனை பண்ணிச் சொல்லேன்.''

''இதுல யோசனை என்னடி?''

''நோ. நான் நிறைய யோசிக்கணும்...''

''சரி, நாளைக்கு சொல்றயா...?''

''ம்ம்ம்...''

''அப்பாடி. மத்தியானம் கத்தினதுக்கு ஏதோ கொஞ்சம் இறங்கி வந்திருக்க...''

''ம்ம்ம்...''

''இப்பவே யோசனை பண்ண ஆரம்பிச்சுட் டயா...?''

''ஏன், கூடாதா?''

''ஏதாவது நல்லதா ஒரு பொயட்ரி சொல்லேன்.''



''சரி சொல்றேன். புரியறதா பார்.

''சோ சோ பாடி பரண் ஏறி
குருவிகள் ஓடக் கவண் கல்லால்
தினை வயல் காத்த குறவள்ளி
கதைகள் சொன்னார் வானொலியில்
மொட்டை மாடி வெய்யிலிலே
வற்றல் வடங்கள் பாயப் பரப்பி
மடிக்கோல் சகிதம் நானிருப்பேன்
வேப்பங் காக்கை சிறகொடிக்க.
சினிமா பாட்டு சில தெரியும்
ஆனை வருமா மாடிக்கு
ஆள்தான் வருமா படியேறி...?
ஓட்டுச் சரிவில் வாய் பிளந்த
புகைக் கூண்டருகே பூனைகள்
மெல்லக் குமுறும் வால் குழைத்து
சிரித்துக் கொள்வேன் உதட்டுக்குள்...''

''ம்ம்... உனக்கும் தனிமை வேதனையாதாண்டி இருக்கு. அதான் இப்படிக் கொட்டறே. இன்னும் வேற ஏதாவது சொல்லேன். இதைவிட ரொமான்டிக்கா எழுதி யிருக்கியா...''

''ஏன் கேக்கற?''

''தூக்கம் வரலைடி.''

''எனக்குள்ளேயும் எப்போதாவது
இடி இடித்து மழை பெய்யும்
மண் நனைந்து மணம் வீசும்
பூ மலரும் நாற்றங்கால் தலை சிலுப்பும்
வண்ணத்துப் பூச்சி படபடக்கும்
மண் புழு நகர்ந்து நகர்ந்து
உயிர் கிளறும்.
இது வசந்தம்தான். இயற்கைதான்.

வரவேற்றுப் பாடத்தான் கவியில்லை.
கவிஞனுக்காய் வசந்தம் காத்திருக்குமா...?
காற்று மெல்ல வசந்தத்தைக்
கடத்திக் கொண்டு போகும்.
சருகுகள் தரையிறங்கி
பூமி வெடிப்பில் சிக்கிக் கொண்ட
மண் புழுவை மெல்ல மெல்ல மூடும்.''

''ஐய்யோ... கல்பனா...'' சுதா விசும்பி விசும்பி அழுதாள். ''நாம யாருக்குமே ஒரு கெடுதலும் செய்யலையேடி. நமக்குத் தெரிஞ்சு யாரையும் நோகப் பண்ணலையேடி.''

''போ. போய்த் தூங்கு.''

''கல்பனா.''

''அழறது எனக்குப் பிடிக்காது. எழுந்து போ.''

சுதா நகர்ந்து போனாள்.

''குட்மார்னிங் சித்தி.''

''குட்மார்னிங் ரமேஷ். சரச்சரன்னு பல் தேய்க்காதே. இப்படி மேலும் கீழுமாய் தேய். ஈறுக்கு மசாஜ் பண்ணு. குட். அப்படித்தான். நிதானமா தேய். நன்னா கொப்பளி. சுதா, நான் முன்னாடி குளிக்கப் போறேன். உன் புடவையை எடுத்துரு. ஏய்...அப்புறம் ஒரு விளம்பரம் மாதிரி எழுதி வச்சிருக்கேன் — என் மேஜைல. அதைப் படிச்சுப் பார், சரசக்கா கிட்ட காமி.''

''என்னடி சுதா, என்ன விளம்பரம்?''

''ராத்திரி பேசினமே அவ கல்யாணம் பத்தி. வீட்டோட மாப்பிள்ளையா வேணும்னு விளம்பரம் குடுக்கலாம்னு சொன்னேன். சரின்னா.''

''காட்டு, பார்க்கலாம்.''

''எம். ஏ. முடித்து சென்னையில் வேலைக்குப் போகும் 28 வயதுப் பெண்ணுக்கு மணமகன் தேவை.



வரதட்சிணை இல்லை. ஜாதி முக்கியமில்லை. மனைவி இழந்தவர், விவாகரத்து செய்தவர்கூட விண்ணப்பிக்கலாம். பழைய வாழ்க்கையை மறக்கும் பெருந்தன்மையுள்ளவராய் இருக்க வேண்டும். பெண் வீட்டாரோடு மாப்பிள்ளையாய் இருத்தல் அவசியம்.''

''என்னடி விளம்பரம் இது...? 'பழைய வாழ்க்கையை மறக்கும் பெருந்தன்மையுள்ளவராய் இருக்க வேண்டும்.' எதுக்கு இந்த வரி...? என்ன அசிங்கம் இது?'' — சரசு சிரித்தாள்.

''உனக்கு ஒரு கெட்டதும் கிடையாதே கல்பனா. இந்த வரி உன்னைப்பத்தி மட்டமா நினைக்க வைக்காதா? ஊர் சிரிக்காதா?''

''போஸ்ட் பாக்ஸ் நம்பர்தானே கொடுக்கப் போறோம். நம்ப விலாசம் இல்லையே...''

''அதனாலே...? பெண் பார்க்க வர்றவன் இந்த விளம்பரம் பார்த்துட்டுத்தானே வரப் போறான்?''

''ஆமாம். நாம கூப்பிட்ட பிறகு வந்த அப்ளிகேஷன்ல நாம செலக்ட் பண்ணின பிறகுதானே வரப் போறான்... ஊர் மொத்தமா கூப்பிடப் போறோம்...?''

''அபத்தம், நீ செய்யறது.''

''நோ.''

''என்ன நோ? அளவுக்கு மீறி ஆடறே கல்பனா.''

''சுதா, வார்த்தையை அளந்து பேசு. எனக்கும் உன் மாதிரியே சுள்ளுன்னு மனசு நோக பேசத் தெரியும். வேணும்னுதான் அந்த வரி எழுதியிருக்கேன். நான் கெட்டுப் போனவ இல்லை. ஆனா இந்த வீட்டு நிலைமையை உத்தேசிச்சுத்தான் எழுதியிருக்கேன்... இந்த வரி படிச்சுட்டு சரின்னு வர்றவன் உன்னையோ, செத்துப்போன அத்திம்பேரையோ — தப்பாப் பேச

மாட்டான். டைவர்ஸி, விடோயர் தேவலாம்னு எழுதின துக்கும் இதுதான் காரணம். வாழ்ந்தவனுக்குத் தவறுகள் பற்றி தெளிவான அபிப்ராயம் இருக்கும்.''

''ஒன்று நிச்சயம் கல்பனா. வர்றவன் என்னை சொல்லப் போறானோ இல்லையோ, நீ நன்னா குத்திக் காமிக்கறே. அதுதான் என்னை உசிரோட கொல்றதுடி.''

''சுதா, என் எய்ம் அது இல்லை. ஐயம் ஸாரி. ஐயம் ரியலி ஸாரி. என் கல்யாண பேச்சை எடுக்க வேண் டாம்னு நான் சொன்னதுக்கு இதெல்லாம்தான் காரணம். கூடப் பொறந்தவ வார்த்தையையே தாங்க முடியாத உன்னால் மத்தவங்க வார்த்தையைத் தாங்க முடியாது. உன்னை யாரும் ஒரு வார்த்தையும் சொல்லிவிடக் கூடா தேங்கற அக்கறைதான் சுதா. உன்னையோ, அக்கா வையோ மனசு நோகப் பண்ணுவேனா...? தப்பா புரிஞ் சுக்கறையே கண்ணம்மா.''

''விடு, கல்பனா. சுதா தப்பாதான் புரிஞ்சுண்டுட்டா. உன்னை எனக்குப் புரியறது. அதுக்காக நீ கெட்ட பெயர் தாங்கிக்கறது அனாவசியம்...''

''மறுபடி நான் கேட்கறேன். நான் கன்னிதான்னு எப்படி நம்பறே?'

''ஈஸ்வரா வேண்டாம். எனக்கு எதுவும் தெரிய வேண்டாம்.'' சரசு காதுகளைப் பொத்திக் கொண்டு சமையலறைக்கு ஓடினாள்.

''அப்ப நான் குளிக்கப் போட்டுமா...?'' சமைய லறையைப் பார்த்துக் கல்பனா கத்தினாள்.

''எக்கேடும் கெட்டு ஒழி'' சரசு பதிலளித்தாள். குளியலறையைக் கதவு மூடிக் கொண்டது.

''இவளை இப்ப எப்படி வழிக்குக் கொண்டு வர்றது...?''



''அவளாதான் புரிஞ்சக்கணும். புரிஞ்சுக்கிற புத்தில இல்லை அவ.''

''இன்னும் ஒரு வருஷம் பொறுத்துப் பார்ப்போமா?''

''வயசாயிண்டே போறதேடீ அவளுக்கு. ஒரு வருஷம் கழிஞ்சாலும் இன்னும் ஒரு கிளை மேல ஏறிதான் வேதாளம் நிக்குமே தவிர, கீழே இறங்காது.''

''என்ன செய்யலாம்...?''

''அவ இஷ்டம் போலவே நடக்கட்டும். பேப்பர்ல குடுத்துரு.''

''மகாபாவி, நாசம் பண்ணிட்டியேடா என் குடும்பத்தை....''—சுதா விரல் நொடித்தாள்.

''யாரைச் சொல்ற...? அவனையா...? போறது விடு.''

''நன்னாவே இருக்க மாட்டான்.''

''நம்ம வாயால் அதெல்லாம் சொல்ல வேண்டாம். நன்னா இருக்கட்டும். அவனையும் நம்பி ஒருத்தி இருக்கா இல்லையா....நாம வயிறெரிஞ்சு பேச வேண்டாம்.''

''இன்னிக்குத்தான் தெரியறது. நான் எவ்வளவு பெரிய தப்புப் பண்ணியிருக்கேன்னு.''

''மனசுல இது பட்டதுன்னாலே போறும். பாதி விமோசனம்.''

''முழு விமோசனம் நம்ப குடும்பத்துக்கு எப்ப கிடைக்கப் போறது? இவளுக்கு என்னிக்கு கல்யாணம் நடக்கப் போறது. புரியலையே.''

''வேணுங்கறவாதான் ஆசைப்படணும். நீயோ நானோ கிடந்து புலம்பறதுல என்ன பிரயோசனம்? தனக்கா இஷ்டம் இல்லாம நாம சொல்றதுக்காகங்கற தாலேதானே இந்த மாதிரி கண்டிஷன்லாம் போடறா?''

''ஆமா—ஆசைப்பட்டா மட்டும் நடந்துடு மாக்கும்...?''

''ஆசைதான் ஆரம்பம், நல்லது, கெட்டது எல்லாத் துக்குமே....''

''உலகத்துல எத்தனையோ விஷயத்துக்கு ஆசைப் படறா. எல்லாமேயா நடக்கறது...?''

''ஆசையோட வேகம் பொறுத்து நடக்கும்.''

''உளறாதக்கா. எனக்கும்தான்....''

''உனக்கும்தான்?....''

''ஒண்ணுமில்லே, விடு. இத அனுப்பிச்சுரட்டுமா ஹிண்டுக்கு...?''

''ஹிண்டு, இண்டியன் எக்ஸ்பிரஸ் ரெண்டுலேயும் குடு.''

சுதா நகர்ந்ததும் சரசுவின் கண்ணில் பளிச்சென்று ஜலம் பொங்கிற்று. பகவானே பொண் ஜென்மமா பொறக்கவே கூடாது. ஆசைப்படுன்னு பொம்மனாட்டிக் குச் சொல்லியா தரணும்?—எத்தனை தடவை அடி பட்டாலும் ஆசைப்படறது மட்டும் நிக்காது. உள்ளுக் குள்ள பொங்கிப் பொங்கிக் குளமா குட்டையா தேங்கி நிற்கும். ஆசைப்படத் தெரிஞ்ச ஒரு குழந்தையை அகலக் கால் வைக்கும்படி பண்ணிட்டியேப்பா. அழகா நடக்கற ஒரு குழந்தைக்கு ஆசையில்லாமயும் பண்ணி யிருக்க. யாரைக் கோச்சுக்கறது? என்னன்னு கோச்சுக் கறது? வதக்கி வதக்கி மூணு பொம்மனாட்டியா எத்தனை நாள் திங்கப் போறோமோ தெரியலை....''

''அக்காவ்....தட்டை வை. சோத்தைப் போடு. இன்னிக்கு ஸ்பெஷல் டூட்டி. எட்டரைக்கு கிளம் பணும். ஆட்டோ பிடிச்சாத்தான் நடக்கும்'' கல்பனா பரபரத்தாள்.



''ஏய், ஆட்டோன்னா நானும் வரேண்டீ. மவுண்ட் ரோட்ல வுட்டுடேன்.''—சுதா துண்டு எடுக்க ஓடினாள்.

''சீக்கிரம் கிளம்பு.''

''அஞ்சே நிமிஷம்'' சுதா உள்ளே ஓடினாள்.

வீடு அல்லாடிற்று. பீரோ துணிகள கலைந்து தழுவின. ஐப்ரோ பென்சில்கள் மூடியிழந்தன. சீப்பில் சுற்றுச்சுற்றைகள் சுருண்டு கொண்டன. பவுடர் தூள் அறை முழுவதும் பரவியது.

''இத்தனை பவுடரும் ஆட்டோ பிடிக்கிறதுக்குள்ள அழிஞ்சுடப் போறது. மெட்ராஸ்ல பேஸ் பவுடர் போட்டுக்கற மாதிரி அபத்தம் எதுவுமில்லை. வேர்த்து வேர்த்து மூஞ்சி மொத்தமும் அன்னாசிப்பழம் மாதிரி திட்டுத் திட்டா ஆகிப்போறது....''—கல்பனா சுதாவிடம் அலுத்துக் கொண்டாள்.

''வாடி என் அன்னாசிப்பழமே....'' சுதா செருப்பு மாட்டிக் கொண்டாள்.

''கப்பக்கிழங்கேன்னுதானே காலேஜ் பொண்கள் பாடறதுகள்?''

''யார் பாத்திருக்கா கப்பக்கிழங்க—?'' சுதா கல்பனா வுடன் தெருவில் இறங்கினாள். வாசலில் நின்று ''ஆட்டோ'' என்று கூவினாள்.

ஆட்டோவின் இருபுறமும் இரண்டு நடிகைகள் படம் ஒட்டப்பட்டிருந்தது.

''யாருடி இது?'' சுதா வலது பக்கம் உள்ளவளைக் சுட்டிக் காட்டினாள்.

''யாரோ கப்பங்கிழங்கு—''

சுதா வாய்விட்டுச் சிரித்தாள். ஆட்டோ டிரைவர் திரும்பிப் பார்த்தான்.

''மவுண்ட்ரோட்ல இறங்கி 'ஹிண்டு' போய் இதக் குடுத்துட்டுப் போறேன்.''

''செய்.''

''கொஞ்சம் வெட்கப்படுடி.''

கல்பனா ஆட்டோவினுள் 'நடுங்கி சிலிர்ப்பதாய் நடித்தாள். முகத்தை வேண்டுமென்றே பொத்திக் கொண்டாள்.

''கொன்னுட்ட, போ.''

''ரொம்ப சுலபம்டி இது.''

''எது?''

''வெட்கப்படறது.''

''கிண்டல் பண்ணாத. நெஜமாவே நீ வெட்கப்படற நேரம் பொம்மனாட்டிக்கு உண்டு.''

''வென்?''

''சொல்லித் தெரிவதில்லை.''

''சொல்லு, எப்ப வெட்கம் வரும்?''

''எத்தனையோ இடம். மனசுக்குப் புடிச்சவன் 'நீ அழகா இருக்கே'ன்னா போறும், பளிச்சுன்னு வெட்கம் வந்துடும். அந்த் 'அழகா இருக்கே'ன்னு சொல்றதுக்கு அர்த்தம் வேற.''

''பளிச்சுன்னு உதட்டைச் சுருக்கி ஒத்தைக் கண் ணாக்கி மூக்கை விடைச்சு காமிப்பேன்.''

''எதுக்கும் அசராத கெட்டிக்காரன் டக்குன்னு 'ஐயோ இன்னும் அழகா இருக்கே'ன்னு சொல்வான். நிஜமாவே வெட்கம் வந்துடும்.''

''அனுபவமா?''

''வயித்தெரிச்சலைக் கிளறாதடி.''



''மவுண்ட்ரோடு வந்துடுத்து.''

''நான் இறங்கறேன். நிறுத்திக்கப்பா.''

''மீதியை சாயங்காறம் வச்சுக்கலாமே?''

''எதை?''

''உன் வயத்தெரிச்சலை.''

''சனியனே, கொல்லணும் உன்னை.''

ஆட்டோ சுதாவை இறக்கிவிட்டு கன்னிமரா வழியே பறந்தது.

ஞாயிறு பேப்பரில் விளம்பரம் வந்தது. பொடி எழுத்தில் வலது மூலையில 1531 என்ற போஸ்ட் பாக்ஸ் நம்பரில் வெளியாயிற்று.

''இத்தனை பொடிசா இருக்கே—படிப்பாளா யாரும் இதை?'' சரசு கேட்டாள்.

''பொண் வேணுங்கறவன் தேடுவான். படிப்பான்.'' சுதா பதில் சொன்னாள்.

''மேட்ரிமோனியல் காலத்தை இப்போ கல்யாணம் ஆனவன் கூட படிக்கிறான்.''—கல்பனா இடைமறித் தாள்.

''எதுக்கு?''

''சும்மா ஒரு ஜாலிதான். இன்னும் பெட்டரா பொண்டாட்டி பாத்திருக்கலாமேன்னு ஒரு நப்பாசை.''

''ச்சே. அப்படியெல்லாம் யாரும் செய்யமாட்டா.''

''உனக்குத் தெரியாது சரசக்கா. ஆம்பளைங்களே அத்தனை பேரும் அல்பம்.''

''கல்யாணம் ஆகவேண்டிய பொண்ணு, நிஷ்டூரமா பேசாத—''

''வர வர பேசக்கூட முடியலை இந்த வீட்ல.''

''வெட்டிப் பேச்சு எதையும் சாதிக்காது கல்பனா.'' சரசு அதட்டினாள்.

''யார் சொன்னா? நான் பேசத்தான் போறேன்.''

''யாரோட...?''

''அப்ளிகேஷன் போட்டுப் பெண் பார்க்க வர்றவனோட...''

''எதுக்குடி...?''

''ஹைய்... சமையல் உள்ளுல பூந்துண்டு புகைக் கூண்டை வேடிக்கை பார்க்கணுமாக்கும். அதுக்கு வேற ஆளைப் பாரு.''

''என்ன பேசப்போற கல்பனா?''—சுதா ஆச்சரியப் பட்டாள்.

''பேரு... ஊரு... படிப்பு... சம்பளம்... உற்றார்... உறவினர், பிடிச்சது, பிடிக்காதது, தெரிஞ்சது, தெரியாதது... அறிஞ்சது... அறியாதது—எல்லாம்.''

''குனிஞ்சு நமஸ்காரம் பண்ணுவியா, மாட்டியா?''

''நோ நமஸ்காரம் பிஸினஸ்.''

''வர்றவன் பெரியவாளோட வந்தா...?''

''ப்ரைம் மினிஸ்டரோடவே வரட்டுமே. பொண்ணு சமையல் உள்ளுல இருக்கா. இப்போ வருவோ. நாங்க மூணு பேரும் அவளோட அக்காமார்கள்னு பேச்சை ஆரம்பிச்சு, இன்டர்வ்யூ பண்ணி பிடிக்கலைன்னு பட்டா பாதில கட் பண்ணி, 'பொண்ணைக் காட்ட மாட்டோம் போய் வா துரையே'ன்னு அனுப்பிடுவேன்.''

''பாவம்டி, இது.''

''பேசறது பாவமா...?''

''அவமானப்படுத்தற மாதிரி ஆகும்.''



''காலங் காலமா பொம்மனாட்டி பட்டுட்டுருக்க அவமானம் அவனும் படட்டுமே...''

''எனக்கு சம்மதமில்லை.''

''வேண்டாம். நிறுத்திடு.''

''கெட்ட கோபம் வரும் கல்பனா.'' சரசு எழுந்து அதட்டினாள். ''என் பொறுமை எல்லை மீறிண்டு போறது. வேலைக்கா ஆள் எடுக்கற நீ, உட்கார்ந்து பேசறதுக்கு...?''

''ஏன், ஏன் பேசக் கூடாது? நாளைக்கு அவனைக் கல்யாணம் பண்ணிக்கப் போறவ நான். குடித்தனம் நடத்தப் போறவ நான். நான் பேசாத வேற யார் பேசி என்ன பிரயோசனம்...''

''உன் சார்பா நாங்க பேசறது போறாதா?'' சுதா இடைமறித்தாள்.

''பேசுவேள், தெரியுமே.... 'பஜ்ஜி எடுத்துக் கொங்கோ, காபிக்கு சர்க்கரை ஜாஸ்தி வேணுமா'ன்னு பேசுவேள்.''

''நீ என்ன பேசுவே?''

''எவ்ரிதிங் அன்டர் தி சன். எனக்கு அவன் ஏத்தவனான்னு நான் தெரிஞ்சுக்கறது முக்கியம்.''

''சரி குனிஞ்சு ஒரு நமஸ்காரத்தைப் பண்ணிட்டுப் பேசேன்.''

''பிடிக்கலைன்னு பட்டா நமஸ்காரம் வேஸ்ட் இல்லையா? இந்தக் கருமத்தைப் போய் நமஸ்காரம் பண்ணினமேன்னு எனக்கு உடம்பு கூசும். நா மாட்டேன்.''

''என்னாலயும் முடியாது, இந்தக் கூத்துக்கு ஒத்து வர'' சரஸ்வதி அக்கா சீறினாள்.

''வேண்டாம் நிறுத்திடு.''

''சரசக்கா, விடு விடு. அவ போக்குல விடு. எங்க போய் முடியுதுன்னு பாக்கலாமே—''

சகோதரிகள் கலைந்தனர். தமக்குள்ளேயே முணு முணுத்தபடி வளைய வந்தனர்.

''இந்த ஏழுல மூணு செலக்ட் பண்ணியிருக்கேன். வரச் சொல்லி உங்க பாஷைல லெட்டர் போடுங்கோ. ஏற்கனவே சரசக்கா உர்ருன்னு இருக்கா. நான் எழுதினா லபோ திபோன்னு கத்துவா. நீயே எழுது.''

''மிச்சம் ஏன் விட்டுட்ட.?''

''ஒண்ணு போஸ்டு பாக்ஸ் நம்பர் தப்பு இன்னொன்னு என்னைவிட வயசுல சின்னவன். ஒருத்தன் 'வேலை இல்லே. சீக்கிரம் கிடைச்சுடும்'னு எழுதியிருக்கான். இன்னொன்னு ஐம்பது வயது. மொதப் பொண்டாட்டி உசிரோட இருக்காளாம். சித்த பிரமையாம்...''

''என்னடி இது, இந்த மாதிரி அப்ளிகேஷன் வர்றது?''

''இவ எழுதின வாக்கியம் அப்படி. வேற யார் போடுவா. அ—ப்—ளி—கேஷன்—?'' சரசு வார்த்தையை அக்கக்காய்ப் பிய்த்தாள்.

''மூணு தேவலாம். எழுதிப் போடு.''

''இன்டர்வ்யூ பண்ணப் போறது நீதானா?''

''சந்தேகமில்லாம—''

''என்னக்கா, எழுதட்டுமா—''

''ஸ்வாமின்னு ஒருத்தர் உண்டுடி. எழுதிப் போடு.''

''தனித் தனியா பட்சணம் பண்ண வேண்டாம். ஒரே நாள்ல தனித்தனி நேரம் குடுத்து வரச்சொல்லிடு.



சுதா, நேரம் முக்கியம்னு எழுதிடு. கும்பலா வந்து ரேஷன் கடை மாதிரி ஆக்கிடப் போறதுகள்.''

தெரு விளிம்பில் அந்த இளைஞன் தயங்கி நின்றான். வீட்டுப் பெயர்ப் பலகையைப் பார்த்தான். கையில் வைத்திருக்கும் பையின் ஜீப் பிரித்துக் காகிதம் எடுத்து விலாசம் உறுதிப்படுத்திக் கொண்டான். கதவு தட்ட கையெடுத்தான். விலகி, அடுத்த வீட்டுத் கதவு தட்டி அவர்களை விசாரித்தான், சீப்பு எடுத்துத் தலைவாரிக் கொண்டான். தட்டினான்.

சகோதரிகள் மூவரும் மறுபடி தட்டட்டும் என்று காத்திருந்தார்கள். அவன் அலையல் முழுவதையும் ஹாலின் உள்ளேயிருந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''ரிப்போர்ட்டர்தானே இந்த ஆள். பார்த்த க்ஷணமே பிடிக்கலை'' கல்பனா பேசினாள்.

''ச்சு...வரட்டும் சும்மா இரு.''—சரசு அதட்டினாள்.

மறுபடி தட்டியதும், சுதா ரேழிக்கு நகர்ந்தாள். தாழ் விலக்கிப் பெயர் கேட்டாள்.

''என் பேர் பரமசிவம், சரஸ்வதியம்மா வீடு இது தானுங்களே?''

''ஆமா—''

''வரச் சொல்லியிருந்தாங்க.''

''வாங்க.''

''பெண் பார்க்க அப்ளிகேஷன் போட்டிருந்தேன், ஹிண்டுல விளம்பரம் பார்த்துட்டு—''

''வாங்க.''

''செருப்பு இங்க விட்டுருலாங்களா—''

''உள்ளே விட்டுடுங்க.''

''நன்றிங்க...''

சரசு முன் நகர்ந்து வரவேற்றாள். தோல் பையை இடுக்கிக்கொண்டு பரமசிவம் பெரிய வணக்கம் போட்டான். உட்காரச் சொன்ன பிறகு உட்கார்ந்தான். ஜிப் பிரித்துக் காகிதங்கள் எடுத்துக்கொண்டு அடுக்கி மடியில் வைத்துக் கொண்டு கால்களை நெருக்கி, "நான் ஹிண்டு பேப்பர்—போஸ்ட் பாக்ஸ்" என்றான்.

"மிஸ்டர் பரமசிவம்தானே—'மனைமலர்' பத்திரிகை ரிப்போர்ட்டர்..."

"ஆமாங்க. சீஃப் அசிஸ்டெண்ட் ரிப்போர்ட்டர். இது அத்தாட்சிக் கடிதம்— எங்க பத்திரிகைலேர்ந்து—" ஃபோட்டோஸ்டட் காப்பியை நீட்டினான்.

"இவங்க சுதா இது கல்பனா? நான் இவளுக்கு மூத்தவ, சரஸ்வதி ஸ்கூல்டீச்சரா இருக்கேன். எல்லோரும் வேலைக்குப் போறோம்."

"பெண்ணுக்கு நீங்க..."

"நாங்க எல்லோரும் பொண்ணோட சகோதரிங்க."

"இவங்களை எங்கேயோ பாத்திருக்கேன். நீங்க பல்கலைக் கழகத்துக்கு வருவீங்களா?" — கல்பனாவைப் பார்த்துக் கேட்டான்.

"இல்லையே."

"எங்கயோ பாத்திருக்கேன். சட்டுன்னு நினைப்பு வரலை."

"அவங்க காலேஜ்லே துணைப் பேராசிரியர்."

"நான் காலேஜ் பக்கம் போறதில்லீங்க..."

"பி. ஏ—ன்னு எழுதியிருந்தீங்க..."

"அது இல்லீங்க. பி.ஏ. தான். மதுரையில் படிச்சேன் சொந்த ஊரு போடி."

"பி. ஏ-ல எக்னாமிக்ஸா?"



"இல்லீங்க. பி. ஏ. தமிழ்."

"உங்க பத்திரிகைல எது கவர் பண்றீங்க நீங்க..."

"இதுன்னு தனியா எதும் இல்லிங்க, போன்னு சொல்ற இடம் போவம், ஒரு ரூம்ல உட்கார்ந்திருப்போம். டெலிபோன் வர வர ஆள் பார்த்து அனுப்புவாங்க. ஒரு நாள் போலீஸ் கேஸ், ஒரு நாள் ஸ்டுடியோ ரவுண்ட் அப், ஒரு நாள் பொலிடிக்கல் மீட்டிங்..."

"ஜர்னலிஸம் படிச்சிருக்கீங்களா?" — கல்பனா கேட்டாள்.

"இல்லீங்க, பழகினதுதான்—"

"புரியலை."

"படிக்கிற படிப்பைவிட பத்திரிகையில உட்கார்ந்து கத்துக்கிடறது உசத்திங்க..."

"வாஸ்தவம்" சரசு தலையசைத்தாள்.

"எட்டு வருஷமா ரிப்போர்ட்டர்தானா?" கல்பனா கேட்டாள்.

"ஒரு ரிப்போர்ட்டருக்கு இது கொறச்ச வயசுங்க. இருபது வருஷமா ரிப்போர்ட்டரா இருக்கறவங்க உண்டு."

"சம்பளம்?"

"சாலரி கவர் வெச்சிருக்கேன். ஆயிரத்து அம்பது அது தவிர, பேட்டா தனி."

"எங்க வீட்டு நம்பர் சரியான்னு பார்த்துத் தெரிஞ்ச பிறகும் பக்கத்து வீட்ல போய் விசாரிச்சிங்களே... டக்குன்னு கதவு தட்ட வேண்டியதுதானே—"

"கூடாதுங்க...எதுவும் ஒரு தரத்துக்கு ரெண்டு தரம் கேட்டுத் தெரிஞ்சுக்கணும். ஒரு மர்டர் நடந்தவுடனே ஸ்பாட்ல போய் ரிப்போர்ட்டர் பேசக் கூடாது. போலீஸ்

பேச வுடமாட்டான். சுத்தி நிக்கிற கும்பல் கிட்ட, அடுத்த வீடு, எதிர் வீடு கிட்டப் போய்ப் பேசணும். ஸ்பாட்ல நிக்கிற போலீஸைவிட, நமக்கு நெறைய விஷயம் கிடைச்சிடும்...''

''உங்களுக்கு பக்கத்து வீட்ல என்ன விஷயம் கிடைச்சது?''

''கெடைச்சுதுங்க. அது எதுக்கு இப்ப...?''

''சும்மா சொல்லுங்க.''

''பொண்ணு வரலீங்களா?''

''உள்ள இருக்கு. வரும். நீங்க சொல்லுங்க.''

''உங்க வீட்ல மாப்பிள்ளை பாக்கற விஷயமே அவங்களுக்குத் தெரியலை. அப்படியான்னாங்க... எந்த பொண்ணுக்குன்னு அடையாளம் விசாரிச்சாங்க...''

''ம்ம்?''

''அதுலேர்ந்து உங்களுக்கும் பக்கத்து வீட்டுக்கும் அவ்வளவா போறாதுன்னு தெரிஞ்சுது. இந்தப் பொண்ணு பாக்கற விஷயத்தைக்கூட நீங்க காதும் காதும் வைச்ச மாதிரி முடிக்க நினைக்கிறீங்கன்னு புரிஞ்சுது...''

''க்ளவர். வெரி க்ளவர்...''

''அதெல்லாம் இல்லீங்க... இது ஊகம்தான். தப்பாவும் இருக்கலாம்.'' பரமசிவம் பெரிய மலர்ச்சியைக் காண்பித்தான்.

''எங்க விளம்பரம் நல்லா படிச்சீங்களா?''

''படிச்சேன்... பெருந்தன்மையான மனசு உடையவர்னு எழுதியிருந்துச்சு, பொண்ணை வரச் சொல்றீங்களா?''

''வரச் சொல்றேன்...''



''அதுக்கில்லீங்க...பொண்ணு புடிச்சுதுன்னா மேற் கொண்டு பேசறதோ பேசாததோ முடிவு பண்ணிடலாம் பாருங்க—''

''ஏன், பார்த்த பிறகுதான் பேசணுமா? இப்பவே என்ன வேணா பேசலாம்.''

''அதுக்கில்லீங்க... பொண்ணு நல்லா இருந்துச் தன்ன, என்னா...அது பழைய விஷயம்னு கேட்கலாம். இல்லேன்னா விட்ருலாம்...''

''அதாவது பொண்ணு பிடிச்சிருந்தா பழைய சமாசாரமெல்லாம் கேட்பீங்க...''

''அப்படித்தாங்க... மனசுக்குப் பிடிக்கலைன்ன கேள்வி அவசியமே இல்லீங்களே...''

''பழசு மறந்திடணும்னு சொல்லியிருக்கமே?''

''கேட்டுட்டு மறந்துடலாமே— கேக்கவே கேக்கா தங்கறீங்களா...''

''கேட்டு என்ன பிரயோசனம்...?''

''அதுக்கில்லீங்க. நான் கட்டிக்கப் போறவன். நாளைக்கு 'அந்தப் பொண்ணையா கட்டப்போற? அது பத்தி விஷயம் தெரியுமா?'ன்னு ஊரில நாலு பேர் கேட்பாங்க. 'தெரியும்'னு சொல்லிடலாமே. மூணாம் மனுஷன் சொல்லித் தெரிஞ்சுக்கறது நல்லதில்லையே...''

''வீட்டு நம்பருக்கே பக்கத்து வீட்ல விசாரிக்கறீங்க. இருபத்தி விசாரிக்காதயா இருந்திருப்பீங்க...''

''அப்படியில்லீங்க. கத்திய கீழே வச்சிட்டுக் கொலைகாரனே பேட்டி குடுத்துட்டா மூணாம் மனுஷங்க பேட்டி எடுபடாதுங்களே. யாருன்னு தெரியாதபோது தான் துப்பு கேக்கறது...''

''முதல்ல சொல்லிடணுங்கறீங்க.''

''ஆமாங்க. பொண்ணு பார்த்ததும் என்னன்னு சகலமும் சொல்லிடணும்...''

''மாட்டோம்னா...?''

''அது நல்லாயில்லீங்களே...''

''நாங்களே மறந்துட்டமே...''

''எப்படிங்க மறக்க முடியும்...?''

''ஞாபகப்படுத்திச் சொன்னாலும் தீர விசாரிக்கணும்னு தோணாதா? அப்படி விசாரிக்கறது எங்களுக்கே கஷ்டமில்லையா? அதான், மறந்துட்டோம்கறது...''

''முதல்ல பொண்ணை இட்டாந்துருங்க...''

''பழசு கேக்கலைன்னா இட்டாரலாம்...''

''நீங்க ஐயருதானுங்களே...?''

''ஆமா...''

''எங்க பக்கம் பாஷை பேசறீங்க...''

''கத்துக்கிட்டேன்...''

''அது என்னான்னு கேக்காம கட்டிக்கிறது நல்லதில்லீங்களே.''

''அதுதான் நல்லதுன்னு எங்க அபிப்ராயம்...''

''என்ன பெரியம்மா...நீங்க ஒண்ணும் பேசமாட்டேங்கறீங்க...''

''நான்தான் பேசறேனே...'' கல்பனா மறுபடியும் அவனைத் தன் பக்கம் திருப்பினாள்.

''அப்ப, பொண்ணு வராதுங்களா...?'' கல்பனாவிடம் கேட்டான். கல்பனா மௌனமாய் இருந்தாள்.



''இல்லீங்க...உங்க ரெண்டு பேர்ல யாரோதான் பொண்ணுன்னு நெனைக்கிறேன்...'' சுதாவையும் கல்பனாவையும் நோக்கிச் சொன்னான்.

''எப்படிச் சொல்றீங்க...''

''ஊகம்தான்... தப்பாவும் இருக்கலாம்.''

''ஊகத்துக்கு அடிப்படை...?''

''சரஸ்வதியா...? மூணு சிஸ்டர்ல பெரியவன்னு பக்கத்து வீட்ல சொன்னாங்க. மூணு பேரும் எதிர்க்க உக்காந்துக்கிட்டு பொண்ணு உள்ற இருக்குங்கிறீங்க...''

''க்ளவர்...வெரி க்ளவர்...''

''அதெல்லாம் இல்லீங்க. விளம்பரம் பார்த்ததும் சிக்குன்னு மனசுல பொறி தட்டுச்சு. வித்தியாசமா இருந்தது. போட்டுப் பார்ப்போமேன்னுதான் போட்டேன்.''

''கல்யாணம் பண்ணிக்கறதா இல்லை...?''

''அதெல்லாம் இல்லீங்க. ஸாரி. அதாங்க, கல்யாணம் செய்துக்கிறதாத்தான் முடிவு. பொண்ணு புடிச்சிருந்ததுன்னா மேற்கொண்டு பேசலாம்...காட்ட மாட்டேங்கறீங்களே...''

''உங்களுக்கு ஃபோட்டோ கூட காட்றதா இல்லை...''

''ஏங்க அப்படி...''

''ரிப்போர்ட்டர் மாப்பிள்ளை எங்க வீட்டுக்குக் கஷ்டம்...''

''ஏங்க அப்டீ...''

''உள்ளே பூந்து பொறப்பட்டா உங்க 'மனைமலர்'ல ஒரு வருஷத்துக்கு ரிப்போர்ட் பண்ணலாம். அவ்ளோ இருக்கு...''

''அட...நீங்க டி.வி.ல கவிதை படிச்சீங்க இல்லே... இப்ப ஞாபகம் வந்துடுச்சு. ப்ரொஃபைல்ல பார்த்ததும் புரிஞ்சுக்கிட்டேன்...''

''ஆமாங்க...போன மாசம்...''

''நல்லா இருந்துதுங்க. பாரதி பத்தி கவிதை படிச்சீங்க இல்லே...''

''அம்பை பத்தி...''

''பாரதி பத்தி ஏதோ சொன்ன மாதிரி...ஜனம் கை தட்டினா மாதிரி...ஞாபகம்.''

''ஆமாங்க...''

''ஏங்க எத்தினி வருஷமா கவிதை எழுதறீங்க...''

''போன மாசத்திலேர்ந்துதான்...''

''நமக்குப் பல எடத்துல வாய்ஸ் உண்டுங்க...எதுனா கவியரங்கம் போடற ஆளுங்க கேட்டா உங்க பேர் சொல்றேன். பட்டிமன்றம் பேசுவீங்களா?''

''இல்லீங்க. எப்பவாச்சும் எழுதறது. எல்லாத்துக்கும் போறதில்லை...''

''கவிஞருங்களுக்கு இப்ப நல்ல டிமாண்டுங்க... மாசம் நாலு கூட்டம் போட்ருலாம்...''

''பரவாயில்லீங்க...''

''அப்பப் பொண்ணு வராதுங்களா?''

''உங்களைச் சந்திச்சதுல ரொம்ப சந்தோஷம்.''

''நம்ம மனைமலருக்கு எதுனா ஆர்ட்டிக்கிள் குடுங்களேன்...''

''என்ன வேணும்னு எழுதுங்க... முடிஞ்சா தரேன்...''



''சரி, பொண்ணு வரவேணாம். என்ன மேட்டர்னு சொல்லுங்களேன்.''

''மறந்துட்டோம்...''

பரமசிவம் சிரித்தான். ''அப்ப வரேங்க...'' என்று நின்றபடி மேசை மீதிருந்த ஒரு டம்ளர் தண்ணீரைக் குடித்தான்.

''அப்ப, நா போய்க் கடுதாசு போடுறேன்...''

''எதுக்கு...?'' கல்பனா வியந்தாள்.

''நம்ம 'மனை மலர்' ஆர்ட்டிக்கிளுக்கு...''

''நிச்சயம் போடுங்க....''

''அப்ப நா வரேங்க...'' மறுபடி கைகூப்பி விடை பெற்று படியிறங்கினான்.

சுதா தொப்பென்று சோபாவில் துவண்டு சரிந்தாள். கண்ணைச் சொருகி மயக்கம் வருவது போல் நடித்தாள்.

இடிந்து போய் உட்கார்ந்திருந்த சரசுவிடம் போய்க் கல்பனா, முகம் அருகே சையசைத்தாள்.

''என்னடி கல்பனா இது...?ஒத்தையா, அக்கிள்ள பை இடுக்கிண்டு பொண்ணு பார்க்க வர்றான்...?''

''அவன் பொண் பார்க்கவே வரலை. விளம்பரம் படிச்சிட்டு விஷயம் என்னன்னு தெரிஞ்சுக்க வந்திருக்கான். பிறவி ரிப்போர்ட்டர். போய்க் கடுதாசு போட சொன்னதும் தூக்கி வாரிப்போட்டது. பார்க்காமலே பொண்ணு புடிச்சிருக்குன்னு எழுதிடப் போறானோன்னு நினைச்சேன்.''

மூன்று சகோதரிகளும் வாய்விட்டுச் சிரித்தனர்.

''கெட்டிக்காரனா தெரியறான்.''

''மகா கெட்டி. நோ டவுட். எட்டு வருஷ எக்ஸ்பீரி யன்ஸ் சும்மாவா...? ஆனா நமக்குச் சரிப்படாது.''

''ஏன் கல்பனா...?''

''ஹி ஈஸ் ஆல்ரெடி மேரீட்...''

''என்னது?''

''ஏற்கனவே பத்திரிகையைக் கல்யாணம் பண் ணிண்ட ரிப்போர்ட்டர். பொண்டாட்டி, புள்ளை, குடித்தனம் எல்லாம் அவனுக்கு ரெண்டாம் பட்சம்தான். நமக்குச் சரிப்படாது.''

''வாட் டு யூ மீன்'— சுதா கேட்டாள்.

''எனக்குச் சரிப்படாதுன்னேன்.''

''பாவம். ஒரு வாய் காபி குடுத்திருக்கலாம் அந்தப் பிள்ளைக்கு. வெறும் ஜலம் குடிச்சுட்டுப் போச்சு.''— சரஸ்வதி சோகமாகச் சொன்னாள்.

''அதெல்லாம் இல்லீங்க. தண்ணி போதும். காபி யெல்லாம் என்னாத்துக்கு....? அப்ப—பொண்ணு இட் டாந்துடறீங்களா?'' கல்பனா அவன் குரலில் பேசினாள்.

இந்த முறையும் சிரிப்பு அதிர்ந்தது. சட்டென்று அடங்கினார்கள். வாசற்கதவு தீர்மானமாகத் தட்டப் பட்டது.

''சரஸ்வதியம்மாளைத் தேடிண்டு வர்றேன். என் பேர் வெங்கடசுப்ரமணியம்.''

''உள்ளே வாங்கோ—''

''ஈஸ்வரோ ரட்சது—''

''என்னது?''

''ஈஸ்வரோ ரட்சது—''



நல்ல உயரம். சிவந்த மேனி. நாற்பது வயதுக்கு மேல் உண்டான நரை. வீபூதி கீறல்கள். சாந்துப் பொட்டு. கதர்ச்சட்டை, கதர் வேஷ்டி, தங்கச் செயின் போட்ட கடிகாரம், லேசான சென்ட், அரகஜா மணம், கை கூப்பும் போது வைர மோதிரங்கள் டாலடித்தன.

சரஸ்வதி அடக்கமாகப் போர்த்திக் கொண்டாள். ''வாங்கோ'. என்றாள்.

''சரஸ்வதியம்மாளா, நமஸ்காரம். நான் வெங்கட சுப்ரமணியம். பூர்வீகம் தஞ்சாவூர் ஜில்லா. நன்னிலம் தாலுகா. பூந்தோட்டம்னு கிராமம். வாத்திமன், என்னைப் பத்தி முழுசா எழுதியிருந்தேன் என் சுடிதாகல...''

''படிச்சோம். உக்காருங்கோ...''

''நீங்களும் உக்காரலாம். நின்னுண்டே பேசணும்னு அவசியமில்லை. இவாள்ளாம் யாரு?''

''என் சகோதரிகள், இவ கல்பனா. காலேஜ் துணைப் பேராசிரியை. இவ அவளுக்கு மூத்தவ சுதா, பாங்க்ல உத்தியோகம். நான் ஸ்கூல் டீச்சர்.''

''ரொப்ப சந்தோஷம். நீங்களும் உட்காரலாம். அம்மாடீ. உக்காரத்துக்கு முன்ன ஒரு வாய் ஜலம் எடுத்துண்டு வா.''—கல்பனாவை நோக்கிக் கேட்டார். ''டம்ளர்ல வேண்டாம், சொம்புல எடுத்துண்டு வா. மெட்ராஸ் என்ன இப்படி புழுங்கறது? கடல் காத்துங் கறா. உப்பா வீசுறதே... எத்தனை தரம் குளிச்சாலும் கசகசன்னு... உக்காரும்மா, நிக்கறயே...''

சுதா உட்கார்ந்து கொண்டாள். கல்பனா தண்ணீர் எடுத்து வர, சொம்போடு வாங்கிக் குடித்தார்.

''இது சொந்த வீடா...''

''ஆமா. நாங்களா சம்பாதிச்சு சேத்தது—''

''அடடா...இரண்டரை லட்சம் பெறுமா...?''

''மேலேயே கேக்கறா...''

''விக்கப் போறேளா...?''

''வித்துட்டு எங்க போறது? உள்ள தள்ளி எட்டக்க வீடு வாங்கினா இவாளுக்குப் போய்ட்டு வர்றது சிரமம்.''

''ஆமா. ஜோலிக்குப் போறவாளுக்கு ஸிடிதான் வசதி—முழுக்க மொஸைக் போட்ருக்கேளா?''

''ஹால் மட்டும்தான் மொஸைக்.''

''அதுதான் கேட்டேன். ரேழில சிமிண்ட்டுதான் போட்டிருந்தது. பழசு வாங்கி ஒக்கப் பண்ணினேளா?''

''ஆமா.''

''வெரி குட். எனக்கும் சொந்தமாய் வீடு, நிலம் இருக்கு. தென்னந்தோப்பு இருக்கு, டிராக்டர் வாங்கி வாடகைக்கு ஓட்டறேன். கூடப் பொறந்தவா ஆறு பேர். நாலு தங்கைகள். எல்லோர்க்கும் கல்யாணம் பண்ணி நிமிர்ந்தாச்சு. அவா அவா சௌக்கியமா இருக்கா. பொண்ணு வேலைக்கு போறதா போட்டிருந்தது. வேலைக்குப் போகணும்னு அவசியமில்லை. எல்லாம் வித்துட்டு இங்க ஸிடிலயே பிஸினஸ் ஏதாவது பண்ணிடலாம்னு ஒரு ஐடியா. விவசாயம் முன்ன மாதிரி இல்லை. சேப்பு கட்சிக்காரர் தொந்தரவு என்பக்கம் ஜாஸ்தி. முதல் கண்டு மீர்றது ரொம்ப சிரமம். சரி, ஸிடில செட்டில் ஆயிடலாம்னு நெனைக்கிறேன்...''

''விளம்பரம் படிச்சேளா?'' கல்பனா கேட்டாள்.

''படிச்சேன். பழைய விஷயங்களை மறந்து விட்ட பெருந்தன்மையான வீட்டு மாப்பிள்ளை—விடோயர், நோ பார், காஸ்ட் நோ பார், டைவர்ஸி நோ பார்னு போட்டிருந்தது. படிச்சேன், ஏதோ முன்ன பின்ன நடந்திருக்கும். அதுக்காக காஸ்ட் நோ பார்னு



போடுவாளா? சரிப்படுமா. இருக்கட்டும். நாலு இடம் பார்த்துச் சலிச்சுட்டு இப்படி விளம்பரம் குடுத்திருக்கலாம், எனக்குப் பொண்ணு புடிச்சிருந்தா டக்குன்னு முடிச்சுடலாம். நீங்க என்ன கோத்ரம். ப்ரஹசரணமா?''

''ப்ரஹசரணம், கௌசிக கோத்திரம்.''

''பொண்ணு ஜாதகம் இருக்கா?''

''ஜாதகம் எதுக்கு?''

''ஏழு, எட்டு சுத்தமா இருக்கான்னு பார்க்கணும். எனக்கு இந்த சமாச்சாரமெல்லாம் கொஞ்சம் தெரியும். நீங்க சொல்லாதயே நிறைய விஷயம் தெரிஞ்சிடும்.''

''ஜாதகம் வச்சிண்டா...'' கல்பனா அதிசயித்தாள்.

''யெஸ், ஏன்? நம்பிக்கை இல்லையா? உன் கையை நீட்டு, வலது கை இல்லை, இடது கை. பொம்மனாட்டிக்கு இடது கை ரேகைதான் பார்க்கணும். சுக்கிரமேடு வலை போட்டிருக்கு. ரொம்ப யோசனை பண்ணுவியா? சாலமன் ரிங் இருக்கு. கட்டை விரல் கோதுமை ரேகை, புதன்மேடு உசரம்-புத்தி ரேகை நீளம், இருதய ரேகையும் புத்தி ரேகையும் செவ்வாய் மேட்ல இணையறது. நீ யாரையும் நம்பமாட்ட. உன் மேல அசாத்திய நம்பிக்கை, நிறைய படிப்பு. குழம்பிப்ப. தலை வணங்காத குணம். கடைசி வரைக்கும் சாப்பாட்டுக்குக் குறைவில்லாத செல்வம்.''

''கல்யாணம் ஆகுமா? பாருங்கோ'' சரசு கேட்டாள்.

''சான்ஸ் கம்மி. முப்பத்திரண்டு ஆகலாம். அப்ப இல்லைன்னா எப்பவும் இல்லை.''

கல்பனா கோபத்துடன் கையை இழுத்துக் கொண்டாள்.

''ஏன், கல்யாணம் ஆகாதுன்னவுடன் கோவம் வந்துடுத்தா? அதனாலதான் நான் சட்டுன்னு யாருக்கும்

ரேகையோ, ஜாதகமோ பார்க்கறதில்லை. எனக்கு மறைச்சுப் பேசத் தெரியாது. பக்குன்னு மனசுல பட்டதச் சொல்லிப்புடுவேன். புழைப்பா வச்சிண்டவன் ஆளாளுக்கு இதமா இழுத்தா மாதிரி சொல்லுவான்.''

சுதா தனது இடது உள்ளங்கையை விரித்துத் தானே பார்த்துக் கொண்டாள்.

சரசு மெல்ல சுதாவிடம் குனிந்து, ''நீ உன் கையைக் காட்டறயா சுதா...?'' என்று முணுமுணுத்தாள்.

''பிழைப்புக்குக் கைரேகை பார்க்கிறவனைக் கூட ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் 'உன் அந்தரங்கம் என்ன, எனக்குத் தெரியணும்' என்று ரேகை பார்க்கிறவனை அயோக்கியன் என்றுதானே அழைக்க முடியும்?'' கல்பனா பல்லைக் கடித்தாள்.

''எங்க வீட்டுப் பொண் ஜாதகத்தில் ஏழும் எட்டும் சுத்தமா இல்லைன்னா, என்ன செய்யறதா உத்தேசம்?''

''முதல்ல ஜாதகம் கொடுங்கோ.''

''ஜாதகம் இல்லை.''

''ஜென்ம நட்சத்திரம், தேதி, நாழிகை சொல்லுங்கோ. சார்ட் போட்டுடலாம்.''

''உங்க ஜாதகம் இருக்கா?''

''இருக்கே, யார்கிட்ட காமிக்கறேள்...? என்ன பார்க்கப் போறேள்...?''

''ஏன்...? அதோ ஏழும் எட்டும்தான். காசு குடுத்தா ஆயிரம் பேர் பார்க்கறா. ஜாதகம் பார்க்க ஆளா இல்லை?'' கல்பனா அடித் தொண்டையில் பேசினாள்.

''பொண் ஜாதகம்தான் கொடுத்துப் பார்க்கச் சொல்றது வழக்கம்.''

''அதனால...''



''நானா விளம்பரம் கொடுத்தேன்... கல்யாணம் பண்ணிக்க...''

''விளம்பரம் கொடுத்தா? நீங்க கொண்டுவந்த தராசலயெல்லாம் ஏறி நிக்கணுமா?''

''இத்தனை கோவம் ஏன் வர்றது உனக்கு? நான் ஏன் ஜாதகம் கேட்டேன் தெரியுமா? இனிமே அந்தப் பொண் எப்படியிருக்குமோன்னு தெரிஞ்சுக்கத்தான்.''

''நாளைக்கு நடக்கறதப் பத்தி இன்னிக்கு யார் காரண்டி தரமுடியும்?''

''பழசு மறந்துடற பெருந்தன்மை வேணும்னு நீங்க பிள்ளை பார்க்கலாம். பொண் பார்க்கறவன் அந்தப் பொண்ணு நிஜமாகவே பழசு மறந்துட்டவளான்னு பார்க்கப் படாதா?''

''வாட் டு யூ மீன்?''

''ஐ மீன், நாளைக்குக் கல்யாணத்துக்குப் பிறகு மறுபடி அந்தப் பொண் தட்டுக் கெட்டுப் போனாக்க?''

''நான்ஸென்ஸ்.... இது கல்யாணமா? இல்லே, ஸ்டாம்ப் பேப்பர் ஒப்பந்தமா? கெட்டுப் போகமாட்டேன்னு எங்க வீட்டுப் பெண் எழுதியா தரணும் உங்களுக்கு?''

''எழுதிக் கொடுக்கறது இன்னும் உத்தமம்தான். எல்லா கல்யாணத்திலயும் எழுதி வச்சுக்கறதுகூட நடக்கறது இப்போ...''

''நீங்க பொண்ணு பார்க்க வரலே சார். வாங்க வந்திருக்கேள். அதுக்கு இந்த வீடு இடமில்லை.''

''வெரி குட். வேற இடம் பார்க்கறேன். பதினாறு கண்டிஷன் நீங்க போடலாம். ஒரே ஒரு ஜாதக பேப்பர் நான் கேட்டா தப்பா? உங்க வீட்டுப் பெண்ணுக்கு இந்த ஜென்மத்துல கல்யாணம் ஆகாது. ஆறுல குரு

அஷ்டமத்துல சனி இருந்தா, இப்படித்தான் துக்கிரித்தனம் செய்யும். இருக்கு போலயிருக்கு.''

''கெட் அவுட் ஐ ஸே.''

''என்னது?''

''வெளியே போடா'' கல்பனா எழுந்து நின்று கத்தினாள்.

வந்தவர் பதறி எழுந்தார்.

''போடவா? மரியாதை தெரியாத குடும்பம்.'' முணுமுணுத்தார்.

''பொண்ணை பேப்பர்ல சுண்டிப் பார்க்கறவன் மரியாதை தெரிஞ்சவனா?''

''ஜாதகம்கறது சமுத்திரம், உன் பி. ஏ. எம். ஏ. படிப்பு மாதிரி இல்லை.''

''கிடக்கட்டும். அதை உள்ளங்கைல குவிச்சு எடுத்துண்டு, எல்லாம் தெரியும்னு எவனும் அலைய மாட்டான்.''

''என்ன போடாங்கற... அவுன் இவன்னு மரியாதை இல்லாம பேசறே.''

''மறுபடி அடாபுடாங்கறதுக்குள்ள வெளியே போ...'' வந்தவர் விருட்டென்று வெளியே நகர்ந்தார். கதவை ஓசையெழ மூடினார். தெருவில் இறங்கி மறைந்தார்.

''என்னடீ... என்ன இது?'' சரசு பதறினாள்.

''கீப் கொயட். நோ மோர் விஸிட்டர்ஸ். அடுத்தாப்ல யாராவது வந்தா இந்த வீடு இல்லைன்னு சொல்லி அனுப்பிச்சுடு. போறும் இந்தக் கூத்து. கீழ்த்தரமான கூத்து...''

''ஜாதகம் கேக்கறதுல என்ன தப்பு கல்பனா...''

''ஏதாவது பேசின... கெட்ட கோவம் வரும் எனக்கு.''



''எனக்குக்கூட அவர் பேசினது சரியா படலை சரசுக்கா...''

''அதுக்காக? அவரைப் போய் வாடா போடான்னு.''

''அதுவும் தப்புதான்.''

''ஐ ஸே, கீப் கொய்ட்...'' கல்பனா கண்களை மூடி மல்லாந்தாள்.

வீடு நிசப்தமாயிற்று. முற்றத்தில் இறங்கிய காக்கை தத்தித் தத்திச் சமையலறைக்குள் போயிற்று. கல்பனா வெறுமே பார்த்துக் கொண்டிருந்தாள். உள்ளே பாத்திரம் ஏதோ உருட்டிவிட்டு அந்தச் சத்தத்திற்குப் பயந்து பதறி ஓடிற்று.

''இதுவும் பெண் பார்க்க வருகிறது. விளம்பரம் படித்துவிட்டு வருகிறது'' என்று நினைத்துக்கொண்டாள்.

காக்கைகள் கூடித் தின்னும்
யாரிடம் இந்தப் பொய்கள்
பயத்தினில் பதறும் காக்கை
கூச்சலை அழைப்பு என்பீர்
அழைத்திட்ட காக்கை ஏதும்
அடுத்ததை விடுவதுண்டா?
அது அது வாய் கொள் அளவு
தின்றதும் பறந்து போகும்
கிடைக்காத கோவம் காட்டும்
முற்றத்தில் காக்கை கூச்சல்
மனிதர் காக்கை ஜாதி
இரட்டைக்கண் ஒற்றை விழி.

ஒருக்களித்துப் படுத்தபடி கல்பனா யோசித்துக் கொண்டிருந்தாள்.

''என்னடீ... இடிஞ்சு போய்ட்டியா...? மூணு மணிக்கு இன்னொருத்தரை வரச் சொல்லியிருக்கமே...'' சுதா அருகே உட்கார்ந்தாள்.

''என்னால இந்த சித்ரவதை தாங்க முடியாது சுதா.''

''நீ பார்க்க வேண்டாம், உள்ளே போய்டு. நானும் அக்காவும் பேசறோம்.''

''நோ...''

''நீயே பாத்துப் பேசறியா?''

''நோ...''

''ப்ளீஸ் கல்பனா.''

''நியாயமா, சுதா இது?''

''உலகத்துல எத்தனையோ அநியாயம். நாமே பொறந்து, வளர்ந்து படிச்சது எல்லாமே பாவம். பட்டு தானே ஆகணும்.''

''நோ...நெவர்'' கல்பனா விலுக்கென்று எழுந்தாள்.

''ப்ளீஸ் கல்பனா. எழுந்து உள்ளே போய்டு. மணி ரெண்டரையாறது. போ. போய்த் தலைவாரி உக்காந்துக்கா...''

''அவனும் இந்த மாதிரி ஏதாவது பேசினால்?''

''நீ வரவே வேண்டாமே.''

''வருவேன். அரிவாள் மணையை எடுத்துண்டு வருவேன்.'' கல்பனா சீறி எழுந்தாள்.

''வா, வந்து எங்க ரெண்டு பேரையும் வெட்டிப் போடு...'' சரசு தலையிலடித்துக் கொண்டாள்.

''ஓ.கே. உங்க ரெண்டு பேரையும் கொன்னுட்டு நானும் வயத்துல சொருகிக்கறேன்...''

''போடி இடியட். அல்ப விஷயம். இதுக்குப்போய் பேத்தற....?'' சுதா அவளை வருடிக் கொடுத்தாள்.

''அவமானமா இல்லை உனக்கு, அவன் பேசினது?''



''இதவிட நெறைய அவமானப்பட்டாச்சு. அதனால இது உறைக்கலை.''

''ச்சீ, டர்ட்டி வுமன். எனக்கு எரியறதுடி...''

''யெஸ். நான் டர்ட்டிதான். நான் சுத்தமா இருந்தா இத்தனை வேதனை உனக்கு இல்லை கண்ணம்மா...''

''நான் அதைச் சொல்லலை...''

''எனக்கு மறுபடி மறுபடி இதுதான் படறது. உறுத்தறது. நீ பதறி ஆடறப்போல்லாம் என்னாலதானேன்னு பயம் வர்றது...''

''எதுக்குடி அழற இப்போ...''

''என் தலையெழுத்து அழறேன். எல்லோருக்கும் சிரமம் குடுக்கறனேன்னு அழறேன். தெரியாம பண்ணிட்டேன்னு சொல்ல முடியலை. தெரிஞ்சேதானே இத்தனை பெரிய தப்புப் பண்ணியிருக்கேன்....?''

''போறும், நிறுத்து.''

''சகலமும் நின்னு போச்சுடி. அழறத ஏன் நிறுத்தணும்? அழுதாவது தீத்துக்கறேன்....''

''ஓ.கே. இந்த ஆளும் வரட்டும். போய் மூஞ்சிய தொடச்சிக்கோ....''

''நீ அலம்பிக்கலையா...?''

''எல்லாம் இந்த முகரக்கட்டை போறும்.''

''எழுந்து வா கல்பனா.''

''அளவுக்கு மீறி 'கும்ப்பல்' பண்ணாத சுதா. நான் தான் சரின்னு சொல்லிட்டேன்ல. விடு என்னை...''

வாசற்பக்கம் கதவு தட்டும் சத்தம் கேட்டு மூவரும் விலுக்கென்று எழுந்தனர்.

ஒரு பத்து வயசுப் பெண் குழந்தை உள்ளே நுழைந்தது. ''மே ஐ கம் இன்...?'' கீச்சுக் குரலில் கேட்டது.

சுதா வரவேற்றாள். விவரம் கேட்டாள். ''அப்பா, இந்த வீடுதாம்ப்பா...'' வெளியே ஓடிற்று. முதிர் இளைஞன். மெல்லக் காதோரம் நரைக்கத் துவங்கிவிட்ட வாலிபன். ஷூ லேஸ் அவிழ்த்து சாக்ஸோடு உள்ளே நுழைந்தான். ஹால் விளிம்பில் நின்று வணக்கம் சொன்னான்.

''என் பேர் பத்மநாபன். இது என் மகள் செல்வி. திருமதி சரஸ்வதி என்பவர் கடிதம் பார்த்து இங்கு வந்திருக்கிறேன்.'' கனத்த குரலில் ஆங்கிலம் பேசினான்.

''நான்தான் சரஸ்வதி, வாங்கோ...''

''நமஸ்காரம்'' மறுபடி கைகூப்பினான். அமர்ந்தான். பெண்ணை இழுத்து அருகே அமர்த்திக் கொண்டான்.

கல்பனா தலையைக் கோதிக்கொண்டாள்.

''ஆறு வருஷம் முன்பு, மனைவி போய்விட்டாள் என்று எழுதியிருந்தீர்கள். இல்லையா...? இரும்பு வியாபாரம் இல்லையா....?''

''ஆமாம், வடசென்னையில் கடை வைத்திருக்கிறேன். வீடும் கடைக்கு அருகில்தான். நானும் என் மகளும் மட்டுமே இருக்கிறோம். இவர்கள்...?''

''என் இளைய சகோதரிகள், இது கல்பனா. இது சுதா'' சரசு முழுவதுமாய் அறிமுகப்படுத்தினாள். மறுபடி எழுந்து கை கூப்பினான்.

''குழந்தைக்காக இரண்டாம் தாரமாய்த் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாய்க் குறிப்பிட்டிருந்தீர்கள். குழந்தை படிக்கிறாளா...?'' சரசு விசாரித்தாள்.



''ஆமாம். ஏழாவது. இன்னமும் அவள் குழந்தையில்லை. அவள் வளரும் முன் அவளுக்குத் துணையாய் ஒரு பெண் அனாவசியம். ஒரு அளவுக்குப் பிறகு அப்பா மட்டும் பொண் குழந்தைக்குப் போறாது.''

''அப்போது குழந்தையை முன்னிட்டுத்தான் திருமணம்...? உங்கள் விருப்பம் ஏதுமில்லையா...?'' கல்பனா கேட்டாள்.

''என் விருப்பம் என்பது இரண்டாவது மூன்றாவது பட்சம். நான் இவளைக் கூட்டிவந்த காரணம்கூட இவளுக்கும் பிடிக்கணும்கறதுக்குத்தான். ஷீ நீட்ஸ் எ மதர், எ குட் மதர்.''

''இவ அம்மா எப்ப இறந்து போனாள்...?''

''இறந்து போகலையே...''

''ஆறு வருஷம் முன்பு என் மனைவி போய் விட்டாள்''—என்று எழுதியிருந்தீர்களே...''

''ஓ. தவறு என்னுடையது. என் தமிழ் பக்குவமில்லாதது. ஆங்கிலத்திலும் அவ்வளவு பயிற்சி இல்லை. இப்படி விவரம் எழுதிப் பழக்கமில்லை. மன்னித்துக் கொள்ளுங்கள். நான் 'போய் விட்டாள்' என்றுதான் எழுதியிருந்தேன். 'இறந்து போய்விட்டாள்' என்று குறிப்பிடவில்லை.''

''என்னது...''

''ஸாரி. ரொம்ப அதிர்ச்சியாய் வந்துவிட்டேனா...''

''போய் விட்டாள்னா...?''

''பிரிஞ்சு போய்ட்டாங்க...''

''டைவர்ஸா...?'' கல்பனா வியந்தாள்.

''ஆமாங்க. விளம்பரத்துல டைவர்ஸி பரவாயில்லேன்னு சொல்லியிருந்ததே...?''

''வாஸ்தவம். ஏன் டைவர்ஸ்—?''

''வெல். கொஞ்சம் பெரிய கதை. கேட்க நேரம் இருக்குமா...?''

''சொல்லுங்க...?''

''எனக்குக் கல்யாணமாகிப் பத்து வருஷம் ஆச்சு. என்னோட அம்மா அப்பா விருப்பத்தின்படி பொண் பார்த்துதான் கட்டிக்கிட்டேன். என் வொய்ஃப் ரொம்ப நல்லா இருப்பா. வசதியான இடமும்கூட. ரெண்டு வருஷம் நல்லா குடித்தனம் பண்ணினா. கெட்டிக்காரி. சந்தோஷமாதான் இருந்தோம். இந்தக் குழந்தை பொறந்தது, செல்வி நீ வாசல்ல போய் வேடிக்கை பார்க்கறயா...'' குழந்தையிடம் குனிந்து கேட்டான்.

''அவள் இருக்க வேண்டாம் என்று கருதுகிறீர்களா?'' கல்பனா ஆங்கிலத்தில் கேட்டாள்.

''அவளுக்கும் தெரிந்த விஷயம்தான். இருப்பினும் குழந்தை மனசு சங்கடப்படும்.''

''செல்வி, உனக்கு டாய்ஸ் வேணுமா? கதை புக்ஸ் வேணுமா? ரமேஷ், இங்க பார் நம்ப வீட்டுக்குக் குட்டி கெஸ்ட் வந்திருக்கு பார்...'' சுதா குழந்தையை உள்ளே அழைத்துக் கொண்டு போனாள். பீரோ மேல் தட்டி விருந்து காமிக்ஸ் புத்தகங்களை எடுத்துப் போட்டாள். ரமேஷ் அந்தப் பெண்ணிடம் பெயர் கேட்டான். புத்தகம் கொடுத்தான். இருவருமாய்ப் புத்தகத்தைப் புரட்டி னார்கள்.

சுதா தொலைவில் குழந்தைகளுக்கு அருகில் அமர்ந்த படி அவனைக் கேட்கத் துவங்கினாள்.

''அவ... என் வொய்ப், கல்யாணத்துக்கு முன்ன யாரையோ லைக் பண்ணியிருக்கா. ஏதோ ஒரு மாதிரி லவ். அவங்க வீட்ல அதைத் தடுத்து எனக்குக் கட்டி வச்சுட்டாங்க. ரொம்ப அழுதாளாம். எனக்குப் பின்னாடி



தான் தெரிஞ்சது. ஆனா, எங்கிட்ட எந்த ப்ராப்ளமும் சொல்லலை. இரண்டு வருஷம் கழிச்சு அவளுடைய பழைய ஸ்நேகிதன் இங்க மெட்ராஸுக்கு மாத்தி வந்துட்டான். அவளை இரண்டு தரம், நான் இல்லாதபோது வந்து பார்த்திருக்கான். அவ பயந்துபோய் எல்லா விஷயமும் எங்கிட்ட சொல்லிட்டா.''

''பாஸ்டர்ட்'' கல்பனாவுக்கு மறுபடி கோபம் வந்தது.

''என்னங்க?''

''ஒண்ணுமில்லை, சொல்லுங்க...''

''நான் அந்தப் பையனைக் கூப்பிட்டு வீட்ல உட்கார வச்சு, 'பழசெல்லாம் மறந்துடுங்க. இப்ப அவ என் மனைவி. வீட்டுக்கு வந்து போய்ட்டிருங்க. வெறும் என் குடும்ப ஸ்நேகிதரா இருங்க'ன்னு சொல்லி வைச்சேன். எப்பவாச்சும் வந்து போவான். எங்க ரெண்டு பேருக்குமே நல்ல ஸ்நேகிதனா பழகினான். கடைக்கு வந்து பேசிக்கிட்டிருப்பான். அப்புறம்தான் தெரிஞ்சது...''

தலை குனிந்து தயங்கினான்.

''தப்பு நடந்து போச்சோ...'' சரசு வாயைப் பொத்திக் கொண்டாள்.

''ஆமாங்க. அவங்களால வெறும் ஸ்நேகிதமா இருக்க முடியலை. இதை நானே கண்ணால பார்த்துட்டேன். ரொம்ப கஷ்டமாயிடுச்சு எனக்கு. ரொம்ப வேதனைப்பட்டேன். என் வொய்ஃபைக் கூப்பிட்டுக் கேட்டேன். பதிலே சொல்லலை. அவன் கிட்ட பேசினேன். படால்னு கால்ல விழுந்து அவளை மறக்க முடியலைன்னு அழுதான். செத்தாலும் மறக்க முடியாதுன்னான். ரொம்ப ஒடைஞ்சு போய்ட்டேங்க உள்ள...

''என் மனைவியை அவ வீட்டுக்கு அனுப்பிச்சேன். அவ வீட்லே தகவல் சொல்லிட்டேன். குழந்தையும் வேணும்னா. முடியாதுன்னு சொல்லிட்டேன். அஞ்சு வருஷம் ஒரு கடுதாசுகூட போடலை. பிரிஞ்சு இருந்தோம். போன வருஷம் அவ வீட்லயே வந்து டைவர்ஸ் கேட்டாங்க, சரின்னுட்டேன். இப்ப...''

''என் மனைவி அவன் கூடதான் இருக்கா. அவளுக்கு இப்ப ஒரு குழந்தையும் பொறந்துடுச்சின்னு கேள்விப்பட்டேன். அந்த நிம்மதிலதாங்க நான் கல்யாணம் பண்ணிக்கற முடிவுக்கும் வந்தேன். இனிமே என் பொண்ணை தன்னுதுன்னு க்ளெய்ம் பண்ண முடியாது பாருங்க...''

''உலகத்துல மோசமான பொம்மனாட்டியும் இருக்கா...தெரிஞ்சுக்கோ கல்பனா...''

''இல்லீங்க. யாரும் ஒலகத்துல மோசமில்லை. சூழ்நிலைதான் காரணம். சூழ்நிலையைத் தாண்டி உறுதியா நிக்க எல்லோருக்கும் முடியாதுங்க.''

''என்ன சூழ்நிலை.... நாலு வயசு குழந்தையை வச்சுண்டு... அநியாயமில்லை... அந்தப் பொண் பண்ணினது. ஒரு தாய் இப்படிச் செய்யலாமா?'' சரசு வியந்தாள்.

வந்தவன் சிரித்தான்.

''என்ன சிரிக்கிறீங்க?''

''தாய்ங்கறது ஒரு நெலைமைதாங்க. யோக்யதையில்லை. குழந்தையே பெத்துக்காத அம்மாவா இருக்கறவங்க உண்டு.''

''உங்களுக்குக் கோபமே வரலையா?'' — சுதா கேட்டாள்.



''வந்தது. கோவம் தாங்காமதான் அவளைப் பிரியணும்னு ஒரு முடிவுக்கு வந்தேன். அவங்க வீட்டுக்கு அனுப்பினேன்.''

''வீட்டுக்கு அனுப்பினது அவளுக்கு சௌகர்யமாச்சே.''

''எனக்கும் சௌகர்யம்தாங்க. திருட்டுத்தனமா வாழுற மனைவி இல்லாதது உத்தமம் இல்லீங்களா?''

''அந்தப் பையனை உதைக்கணும். மனசைக் கலைச்சிருக்கான் பாபி...'' கல்பனா இரைந்தாள்.

''அவனை யாரோ கலைச்சிட்டாங்க. அவன் என்னை கலைச்சுட்டான். ஒதச்சா முடிஞ்சுருமா எல்லாம்.''

சகோதரிகள் வியப்பானார்கள்.

''மிஸ்டர் பத்மநாபன்... நான் கொஞ்சம் ஆழமா இறங்கி ஒரு கேள்வி கேக்கறேன். தப்பா நெனைக்காதீங்க'' கல்பனா முன்னுக்கு நகர்ந்தாள். ''ஒரு மோசமான எக்ஸ்பீரியன்ஸுக்குப் பிறகு மறுபடி கல்யாணம் செய்துக்கத் தீர்மானம் பண்ணியிருக்கீங்க, இப்படி கட்டிக்கிற பொண்கிட்ட கடுமையாயிட மாட்டீங்களா?''

''புரியுதுங்க. நியாயமான கவலை. நல்ல கேள்வி. ஒரு வேர்க்கடலை சொத்தைனா கூடையோடவா எறிஞ்சிட முடியும்? நப்பாசைதாங்க. நல்லதா கெடைக்காதான்னு நம்பிக்கைதான்.''

''நல்லா இந்த விளம்பரம் படிச்சீங்களா?''

''பழகு மறந்துவிடும் பெருந்தன்மையான வீட்டு மாப்பிள்ளையாக... படிச்சேன்.''

''பழகு என்னன்னு கேக்கத் தோணலையா?''

''மறந்துடணும்னு சொன்னீங்களே, அதனால் கேக்கலை.''

''உங்க விஷயம் முழுக்கச் சொன்னீங்களே—பதிலுக்கு எங்களையும் கேக்கணும்னு தோணலியா?''

''வேண்டாங்க. என் விஷயம் கொஞ்ச நாள் எனக்கு அவமானமாகத்தான் இருந்தது. இப்ப இல்ல. காக்கா தலைல எச்சமிட்ட மாதிரி அவமானம் இது. விழுந்த நேரம் அருவருப்புதான். அப்புறம் சுத்தமா தொடைச்சு எறிஞ்சிட்டேன். எச்சத்தையே துடைச்சுக்கிட்டு இருக்கிறது தப்புங்க. ஏங்க, பெண்ணை கூட்டிட்டு வரலாமே. அவங்களும் உக்காந்து பேசட்டுமே...''

''பொண்ணு உள்ள இருக்கு, வரும்.''

''கல்பனா...'' சரசு இடைமறித்தாள்.

''இன்னும் ஒரே ஒரு கேள்வி. பெண்கிட்ட ஏதோ குறை இருக்குன்னு தெரிஞ்சும் ஏன் சரின்னு வந்தீங்க? தப்பில்லாத பொண் கிடைக்குமே... ஒரு வேளை, உங்களுக்கு இன்னும் உறுத்தல் இருக்கா...?''

''இதுவும் நல்ல கேள்விதான். காலேஜ் லெக்சரர் இல்லே...? அதான் கூர்மையா பேசறீங்க. தப்பு என் கிட்ட இல்லீங்க. எனக்கு மனைவியா இருந்தவகிட்ட இருக்கு. இந்தப் பொண் குழந்தை பொறக்கலைன்னா நான் மறுபடி ஒரு மாசு மறுவில்லாத பொண்ணு பார்த்திருப்பேன். எனக்கு இப்ப வொய்ப் மட்டும் தேடலை, என் பொண்ணுக்கு அம்மாவும் தேடறேன். நாளைக்கு எம் பொண்ணப் பார்த்து 'தட்டுக்கெட்டுப்போனவளுக்கு பொறந்தவதானே நீ...? உன் ரத்தத்திலும் அப்படிதான் இருக்கும்'னு வந்த பொண்ணு பேசக் கூடாது.''

''ஸோ, இந்தப் பேச்சு வராத இருக்கத்தான் குறையுள்ள பொண்ணு தேடறீங்க?''



''இல்லீங்க. குறைபட்ட பொண்ணுக்குக் குறைபட்ட குடும்பத்து நிலைமை தெரியும்னு தேடறேன். ஒரு தவறு பண்ணி நிமிர்ந்துவிட்ட பொண்ணு என் நிலைமையைப் புரிஞ்சுக்கும்னு நினைக்கிறேன். வேதனைப்பட்டவர்களுக்கு வேதனையின் வலி தெரியும்னு யோசிக்கிறேன்.''

''ஆக, இந்த க்ஷணம் தப்புங்கறது ஒரு யோக்யதை, க்வாலிஃபிகேஷன் ... உங்களைப் பொறுத்தவரை...''

''அப்படி இல்லீங்க. நான் வேற மாதிரி யோசிக்கிறேன். முதல்ல லவ் பண்ணி, லவ் பண்ணின பொண்ணு வேற இடம் கட்டி, பிறகு அவ புருஷனைப் பிரிஞ்சு, அஞ்சு வருஷம் வீட்டோட கிடந்து, அதற்குப் பிறகு ரெண்டு வருஷம் கழிச்சு அந்தப் புள்ளை எனக்கு மனைவியா இருந்தவளை ஏத்துக்கிட்டு இருக்கு. இது சரியா, தப்போ, மரபோ, மரபில்லையோ ஒரு விஷயம் கவனிக்கணும். அந்தப் பையன்கிட்ட ஏதோ ஒரு ஸின்ஸியாரிட்டி இருக்கு இல்லியா...? அந்த ஸின்ஸியாரிட்டிதான்—நான் பேசறது தப்புங்களா? ஸோ, நாம் கொஞ்சம் மாறுதலா ஒரு சிரமப்பட்ட பொண்ணை எடுத்துக்கிட்டா என்னன்னு நெனைச்சேன்.''

''மார்வலஸ்...'' கல்பனா வியந்தாள்.

''ஏங்க...?''

''வயசுல சின்னவரா இருந்தாலும் தெளிவா, தீர்க்கமா பேசறேள். பதட்டமில்லாம பேசறேள்...''—சரசு பாராட்டினாள்.

''அனுபவம்தாங்க. என் வேதனையான அனுபவம், என்னை நிறைய மாத்திடுச்சு. யோசிக்க வச்சுது...''

கல்பனா எழுந்தாள். உள்ளே சமையலறைக்கு நகர்ந்தாள். வாஷ்பேஸினில் முகம் கழுவிப் பொட்டு வைத்துக் கொண்டாள். பூ வைத்துக் கொண்டாள்.

காபி கலந்து எடுத்து வந்து, அவனெதிரே வைத்தாள். குனிந்து தரையில் விழுந்து நமஸ்கரித்தாள்.

''என்னங்க... பொண்ணு...?''

''அவதான் பொண்ணு. கடைசி இவதான். இவளுக்குதான் விளம்பரம் குடுத்தது.''

''இவங்கதான் சொன்னாங்க... பொண்ணு உள்ள இருக்குன்னு...?''

''உங்களைப் பேசிப் புரிஞ்சுக்க அப்படி சொன்னா. மன்னிக்கணும், அவ கொஞ்சம் மாடர்ன் டைப்.''

''ரொம்ப சந்தோஷங்க— அவங்ககூடப் பேசினது எனக்கும் பிடிச்சிருந்தது. சூட்சுமமா கேக்கறாங்கன்னு தோணிச்சு. ஆனா...''

''என்னங்க....?''

''பொய் சொல்லியிருக்க வேணாம்....''

''மறுபடி மன்னிப்பு கேட்கிறோம்'' — கல்பனா இம்முறை கைகூப்பினாள். ''அதுக்கு ஒரு காரணம் இருக்கு. இப்ப நான் கொஞ்சம் பேசறேன். சரசு அக்கா புருஷன் மோசமான நடவடிக்கைகள்ல ஈடுபட்டுக் குடும்பத்தை ரொம்ப அலைக்கழிச்சு செத்துப் போனார். இவ சுதா... பாங்ல கூட வேலை செய்யற பையனை லவ் பண்ணி, அது எல்லோருக்கும் தெரிஞ்சு, கடைசில தோத்துப் போயிட்டா. எனக்கு ரெண்டு பேரும் உயிரான சகோதரிகள். தப்பா, மனசு நோகும்படியா, பேசக் கூடாதுங்கற எண்ணத்துல அவங்க பழைய வாழ்க்கையை அவமானமா என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறவர் இவங்களை எடுத்துக்கக் கூடாதுங்கற எண்ணத்துல இப்படிச் சின்னப் பொய் சொல்லும்படி ஆயிடுத்து. உங்க குழந்தை மேல உங்களுக்கு இருக்கிற அக்கறை மாதிரி எனக்கு இவங்க மேல அக்கறை உண்டு. அதனால் இவங்க எதிர்காலம் பத்திக் கவலை



உண்டு. அதனால்தான் ஒரு தப்பும் செய்யாத நான் இந்த மாதிரி தப்பு செய்த பெண்கிற மாதிரி விளம்பரம் கொடுத்தேன். என்னைத் தயக்கமில்லாம ஏத்துக்கறவனாலதான் இவங்களுக்குக் கெடுதல் வராதுன்னுதான் பொண்ணு உள்ள இருக்கிறதா சொல்லி, நானே வரவங்ககிட்ட பேசினேன்...''

''வெரிகுட். வெரிகுட். உங்க காரணம் ரொம்ப நியாயமானது. ஆனா, நிஜமாகவே நீங்க...''

''யெஸ்...ஐயம் எ க்ளீன் ஸ்லேட். இதுவரை ஒரு ஆணையும் மனசாலகூட நினைக்காதவள். ஒரு சின்னத் தவறுகூட செய்யாதவள்.'' கல்பனா நிமிர்ந்து பதில் சொன்னாள்.

அவன் வியப்புடன் அவளை பார்த்துக் கொண்டிருந்தான்.

''நீங்க டி.வி.ல சமீபமா கவிதை படிச்சீங்க இல்லை...? அம்பை கதை சொன்னீங்க இல்லை...? உக்காருங்க...ஏன் நிக்கணும்?''

கல்பனா உட்கார்ந்தாள். ''ஆமாம். கேட்டீங்களா?''

''ம்ம், கேட்டேன். அது பத்தி பேசலாமா?''

''ப்ளீஸ், உங்க அபிப்ராயம் சொல்லுங்க.''

''முதல் விஷயம் அது கவிதையே இல்லை. கவிதன்னா என்னான்னு உங்களுக்குத் தெரியலை. இருங்க படிச்சுடறேன். இரண்டாவது, அம்பை மாதிரி ஆண் வேஷம் போடச் சொல்லி, 'ரிவெஞ்ஜ்' எடுத்துக்கச் சொல்லி இன்றைய பெண்ணைக் கூப்பிடறீங்க. ஏன் உங்க சிஸ்டர் போய் அந்த பழைய ஆளை வெட்டலை. இல்லை நீங்க ஏன் அவங்களுக்குப் பதிலா போய் வெட்டியிருக்கக் கூடாது? பீஷ்மர் பண்ணினது ஒரு ஸ்லிப். அவருடைய எண்ணம் அம்பையைத் தெருவில் விட்டது இல்லை. விசித்திர வீரியனுக்குக் கல்யாணம்

செய்து கொடுக்கிறது. விசித்திர வீரியனை மாட்டேன்னு மறுத்தது அம்பை. அவளை மறுபடி சால்வன்கிட்ட அனுப்பற பெருந்தன்மை பீஷ்மர்கிட்ட இருந்தது. அனுப்ப அவசியமில்லை. அனுப்பினாரு. சால்வன் மறுத்தது. அம்பையின் தலைவிதி. சால்வன் அம்பை யுடைய காதலை விடத் தன் கௌரவம் முக்கியம்னுட் டான். அம்பை சால்வனை வெட்டியிருக்கலாம். ஏங்க பீஷ்மன்கிட்ட கோச்சுக்கிட்டா? அவர் பிரம்மசரியம் ஊர் அறிஞ்ச விஷயம். ஒரு நல்ல காரியத்துக்கான விஷயம். உண்மையான லவ் கௌரவம் பார்க்காது. கன்னியா, கற்பிழந்தவளான்னு பார்க்காது உடம்பா லவ் பண்ணுது? மனசுங்க. தன்னை வேணும்னு கடைசிவரை நின்ன அம்பையை ஏன் மறுதலிக்கணும் சால்வன்...? தன்னுடைய லவ்ல கொறைய வச்சுக்கிட்டு ஊரை எரிக் கிறது வெறும் வெத்துக் கோபம். நான் பேசறது சரியா?''

சுதா படபடவென்று கை தட்டினாள். ''அட, இப்படி ஒரு ஆங்கிள் இருக்குன்னே தெரியலை எங்களுக்கு... என்ன கல்பனா...?''

''ஏங்க, வருத்தமாயிருச்சா? இன்னும் கொஞ்சம் பேசிடறேன். க்ளீன் ஸ்லேட்டுன்னு சொல்றீங்க. கொஞ்சம் கர்வமாகவே சொல்றீங்க. அக்கா வாழ்க்கைக் குப் பொய் சொன்னேன்னீங்க. நானும் பொய் சொல்லி யிருக்கலாம். பயம்தாங்க பொய்க்கு அடிப்படை. நீங்க சொன்னது பொய்யின்னு தெரிஞ்சதும் உங்க புத்தி சாலித்தனம் 'ச்சேன்னு' போயிடுச்சுங்க எனக்குள்ளார. ஐயாம் ஸாரி. எனக்கு இந்த இடம் சம்மதமில்லை.''

எழுந்தான்.

''ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம். அதனா லேயே நம்ம தேசத்து திருமணம் எல்லாம் அசிங்க மாயிடுச்சு. இன்னும் எத்தனை பொய் இருக்குமோன்னு



சந்தேகம் வருது. பயம் மேலும் பொய் சேர்க்குது. கற்பு மட்டுமே உயர்ந்த குணம் இல்லீங்க, உண்மையா இருக் கிறது கோவம் இல்லாம இருக்கிறது—இதுதான் நல்ல குணம். நிச்சயம் நாளைக்கு என் பொண்ணை மட்டமா பேசிட முடியும். எனக்கு உங்களை ஏற்க சம்மதமில்லை.

''அவ எங்க நல்லதுக்குத்தான் சொன்னா. தப்புதான். மன்னிக்கணும்''—சரசு கை கூப்பினாள்.

''ச்சே—ச்சே. பெரிய வார்த்தை சொல்லாதீங்க தாயே. அவங்க கோபம் எனக்குப் புடிச்சிருக்கு. அவங்க சூழ்நிலை புரியறது. எந்த சூழ்நிலையிலயும் தன்னை விட்டுக்கூடாது, அதான் சொல்ல வந்தேன். உங் களுக்கு ஆட்சேபணை இல்லேன்னா இவங்களை, இவங்க பேர் என்ன...? சுதாவா? அவங்களைக் கல்யாணம் செய்துக்கறேன். உங்க வீட்டோட மாப் பிள்ளையா இருக்கேன். என் பெண்ணும் என்கூட வரும். யோசனை செய்து சொல்லுங்க. காபி நீங்க போட்டீங்களா கல்பனா... நல்லா இருக்கு...''

கல்பனா உள்ளே துவண்டாள். மெல்லச் சரிந்து உட்கார்ந்து முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

''மிஸ் கல்பனா. ரொம்ப வருத்தமாயிடுச்சா? இவங்க வாழ்க்கையாலதானே நீங்க இத்தனை சிரமப்பட்டீங்க? உங்க மேலேயே பழி போட்டுக்கிட்டீங்க. உங்க சிஸ்டர் கல்யாணம் உங்களுக்கு வருத்தமில்லையே...?'' மறுபடி கேட்டான்.

''இல்லை''...கல்பனா பதில் சொன்னாள்.

''வெரிகுட். சரஸ்வதியம்மா, உங்க சிஸ்டர் சுதா வுக்கு என்னைப் புடிச்சிருந்தா, கல்யாணத்துக்கு நான் தயார். என் வாழ்க்கையை நான் சொன்னதாலேயே அவங்கள பத்தி சொல்லணும்னு அவசியமே இல்லை.''

''சார், ஒரே ஒரு கேள்வி...''—சுதா முன் வந்தாள்.

''கேளுங்க சுதா.''

''என் தங்கை க்ளீன் ஸ்லேட்டுன்னதாலதான் அவ வேண்டாங்கறீங்களா? நான் தப்பு பண்ணுனவங்கறதுனால்தான் ஏத்துக்கிட்டீங்களா...''

''இல்லீங்க. நிச்சயமா இது காரணம் இல்லை. என்னால யாரோடயும் குடித்தனம் பண்ண முடியும். என் வொய்ஃபே நாலு வருஷம் கழிச்சு வந்திருந்தா கூட நான் ஏத்துக்கிட்டிருப்பேன். ஆனா அடுத்தவங்களைப் பேச்சால எடை போட்டுட முடியும்னு நெனைக்கற சாமர்த்தியம் எனக்கு பயமாயிருக்குங்க. அம்பை தான் பாதிக்கப்பட்டதால் பீஷ்மரைக் கொல்லணும்னு வாழ்க்கையை மாத்திக்கிட்டது நல்லதில்லீங்க. பாதிப்புக்கு பதில் பாதிப்பு, வாழ்க்கையாயிடக் கூடாது. பீஷ்மர் நிலைமையை அம்பை புரிஞ்சிக்கவேயில்லை. வெறும் கோபம்தான் மிஞ்சினது. கெட்டு போயிட்டான்னு என் மனைவியை வெட்டியிருந்தேன்னா என் குழந்தை கதி என்ன...? நான் அந்த இன்ஸல்டை ஏத்துக்கிட்டேன். தாங்கினேன். மறந்தேன். இன்னிக்கு மறுபடி ஒரு நல்ல வாழ்க்கை அமையும்னு நம்பிக்கை வந்திருக்கு. போர் செய்து ஜெயிச்சுட்டா பிரச்னை தீருங்களா? புரிஞ்சுக்கறதுதான் தீர்வு. அதுக்கு ஒரு நிதானம் வேணும். நிதானத்துக்கு வர மன அமைதி காரணம். மன அமைதிக்கு கான்ஷியஸ்னஸ் அடிப்படை. கான்ஷியஸோட இருக்கறதுதாங்க வாழ்க்கை. எது செய்தாலும் என்ன செய்யறோம்னு நாலு பக்கமும் யோசிச்சிப் பார்க்கறதுதான் வாழ்க்கை. கோபமா இருக்கறதுதான் நான் சொன்ன எல்லாத்துக்கும் எதிரி, அது குழப்பம்தான் குடுக்கும்.''



''பகவானே— இப்படிப் பேசற ஒரு நல்ல புருஷனை வேண்டாம்னு போனாளே ஒருத்தி...'' சரஸ்வதி வியந்தாள்.

''நான் வரேங்க. செல்வி, கிளம்பு... வணக்கம் சொல்லு.''

அந்தப் பெண் கல்பனா எதிரே நின்று ''வணக்கம்'' சொன்னது. ''போய்ட்டு வரேன்'' என்றது. கல்பனா அதை வருடிக் கொடுத்தாள்.

''சுதா வேணா பஸ் ஸ்டாண்ட் வரைக்கும் போய் குழந்தையை விட்டுட்டு வாயேன்...'' — சரசு மெல்ல சொன்னாள். சுதா செம்மையானாள்.

உள்ளே ஓடிப்போய் முன் தலையை வாரிக் கொண்டு குழந்தையின் கையைக் கோர்த்துக் கொண்டாள்.

நீண்ட நாட்கள் கழித்துத் தளரத் தளர வெட்கத்துடன் நடக்கும் 'தங்கையைப் பார்க்கையில் சரசுவுக்குச் சந்தோஷமாக இருந்தது. கதவைத் தாழிட்டு உள்ளே வந்து நொறுங்கிக் கிடக்கும் கல்பனாவை இழுத்து அணைத்துக் கொண்டாள்.

''ஏண்டி... ஏன் எதுவும் பேச மாட்டேங்கறே...?''

''பிறப்பில் வருவது யாதெனக் கேட்டேன்.
பிறந்து பாரென இறைவன் பணித்தான்.

இறப்பில் வருவது யாதெனக் கேட்டேன்.
இறந்து பாரென இறைவன் பணித்தான்.

மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்.
மணந்து பாரென இறைவன் பணித்தான்.

அனுபவித்தேதான் அறிவது வாழ்வெனில்.
ஆண்டவனே நீ ஏனெனக் கேட்டேன்.

ஆண்டவன் சற்றே அருகினில் வந்து,
அனுபவம் என்பதே நான்தான் என்றான்.''

''உன்னுதாடீ இந்தக் கவிதை...?''

''இல்லக்கா. கண்ணதாசனுது. வாழ்க்கையை நன்னா அனுபவிச்சவனோடது. நல்லதும் கெட்டதும் நேரே பார்த்தவனுது. மனசும் உடம்பும் ரொம்ப சிரமப்பட்டவனுடைய கவிதை இது. என்னால் இப்போதைக்குக் கவிதை எழுத முடியாதுக்கா. கவிதைங்கறது ஒரு நல்ல அனுபவம். எல்லா நல்ல அனுபவமும் எழுதினாலும் எழுதாட்டாலும் கவிதைதான். நல்ல கவிதைக்கு ஒருத்தர் காத்திருக்கணும்....''

''என்னடீ... என்னென்னவோ பேசறே.''

''இல்லக்கா... இப்பதான் சரியா பேசறேன்.

★ ★ ★